மாலை: 51 மணி: 2 பிப்ரவரி 2009 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

தமிழகத்தின் ஆலயங்கள் தங்கமாகும் காலங்கள்!

பொன்னான வாய்ப்பு!

ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் பொன் ஆலயம் வழங்கும்

24கேரட் கோல்டு கோட்டிங்!

அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
98848 77722

கலசங்கள் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
1	35,000	8,000	27,000
2	2,19,000	48,000	1,71,000
3	4,66,000	1,00,000	3,66,000
4	6,64,000	1,45,000	5,19,000
5	9,77,000	2,14,000	7,63,000
7	18,00,000	3,94,000	14,06,000

கொடி மரம் — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!

அளவு அடிகளில்	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
9	23 ல	6 ல	17 ல
12	31 ல	8 ல	23 ல
20	52 ல	14 ல	38 ல
30	78 ல	21 ல	57 ல
40	104 ல	27 ல	77 ல

கவசம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
12"x 9"	28,000	10,000	18,000
15"x12"	47,000	16,000	31,000
24"x18"	1,12,000	39,000	73,000
36"x24"	2,25,000	78,000	1,47,000

தங்கரதம்

அளவு	பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங்	ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம்	உத்தேச சேமிப்பு
8	69 ல	15 ல	54 ல
9	84 ல	18 ல	66 ல
10	99 ல	22 ல	77 ல
12	1,48 ல	33 ல	115 ல

தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2833 2655/4205 991

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 மாசிமாதம்
மாலை 51. மணி 2 பிப்ரவரி 2009

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

வணக்கம்.

முன்நீர் எனப்படும் கடலில் நீராடுவது மகிழ்ச்சியை அளிப்பதுடன் வாழ்வில் புண்ணியத்தையும் நல்குகிறது. கடலில் நீராடுவதற்குரிய மாதம் மாசி மாதமாகும். தெய்வங்களும் மாசி மாதத்தில் நீராடி மகிழ்வெய்துகின்றனர். திருஞானசம்பந்தர் "மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்" என்று சிவபெருமானைப் போற்றுகின்றார்.

உமையன்னை சிவபெருமானை பூசித்து பேறுபெற்ற நாளாக சிவராத்திரி விளங்குகிறது. அவருக்கு அருளி, அணைத்துக் கொண்டு காட்சி தரும் கோலமான அணைத்தெழுந்த நாதரை முகப்பாகக் கொண்டு இம்மாத மலர் மலர்கிறது.

மாசிக்கடலாடலில் மகிழ்வெய்தும் நாம் அப்பரை கடலில் இருந்து கரையேற்றிய பாடலீசுவரப் பெருமானை உள் முகப்பில் தரிசிக்கிறோம்.

சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் சிவராத்திரி மகிமைகளும், பல்வேறு கிளைச் செய்திகளும் இவ்விதழில் வெளிவந்துள்ளன. மேலும் சிவராத்திரியில் அருள்பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மனின் திருத்தலத்தைப் பற்றிய செய்திகளை ஆலய உலாவில் காண்கிறோம். மற்றோர் உலா கட்டுரையில் இன்னம்பர் ஆலயத்தை விளக்குகிறார் பனையபுரம் அதியமான்.

நெருப்புமயமான தூணின் நடுவிலிருந்து சிவபெருமான் வெளிப்பட்ட நாளே சிவராத்திரி என சிவபுராணம் கூறுகிறது. அதேபோல் தூணிலிருந்து வெளிப்பட்ட நரசிம்மரை இவ்வேளையில் வண்ணப்படங்களில் காண்பதுடன் அவருடைய நல்லருட்திறன் பற்றிய கட்டுரையும் இவ்விதழில் காண்கிறோம்.

புகழேந்திப்புலவரின் வைணவப்பற்றை வேலூர் நாராயணன் விளக்குகிறார். அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலையாக "அமுதவாக்கு" எனும் கட்டுரையும், பெ. இராமநாதபிள்ளையின் "உலகம் உய்ய உதித்த உடையவர்" தொடர் கட்டுரையும் இவ்விதழில் வெளிவந்துள்ளன.

இந்த இனிய வேளையில் எல்லோரும் எல்லாமும் பெற்று, இனிமையாக அமைதியுடன் வாழ அருள்புரியுமாறு இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க, வளர்க, வளம் பல சூழ்க!

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
முதன்மை செயலர்/ ஆணையர்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

குறளோவியம்

அன்று தகடூரை ஆண்டுவந்த அதியமான் நெடுமானஞ்சி வாள் தூக்கி 'வையம் கலக்கும் மாவீரன்! ஈட்டியொன்று முகத்தில் பாய்ந்திடத் துள்ளிவரக் கண்டபோதும் இமை கொட்டாத துணிவு மிக்கோன்! போர்க்களம் அவன் தவழ்ந்து விளையாடிய தாழ்வாரம்! வேலும் கணைகளும் அவன் பிள்ளைப் பருவத்து விளையாட்டுக் கருவிகள்! விழுப்புண்களை மார்பில் புரளும் முத்தாரமாகக் கருதும் வீரத்திருவினன்! புறமுதுகிடுவதை இழுக்கென்று எண்ணிடும் புறநானூற்று இலக்கியம் கண்ட தமிழ் இனத்தின் வெற்றிச் சுடர் விளக்கு!

போர் ஆர்வம் கொண்ட அந்தத் தமிழச்சீயம்; அவ்வாறே தனை வளர்த்த மொழியின் மீதும் பேரார்வம் கொண்டவன்! அவனைக் குறித்துப் புறப்பாடல் வழங்கிய ஔவை, பின்வருமாறு கூறிப் புகழ்கிறாள்.

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்
தொடித் தடக்கை
ஆர் கலி நறவின் அதியர் கோமான்."

பாராட்டு அத்துடன் நிற்கவில்லை! மேலும் கூறுகிறாள் ஔவை!

"சிறியிலை நெல்லித் தீம்
கனிகுறியாது
ஆதல் நின் அகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே!"

அதாவது மிக நீண்ட ஆயுள் பெற்று வாழக்கூடிய வலிமையைத் தரவல்ல அரிய நெல்லிக்கனியொன்று தகடூர்த் தரணியாளும் அதியமான் நெடுமானஞ்சிக்குக் கிடைக்கிறது. சாவைத் தடுக்கக்கூடிய அருமருந்தாம் அந்த நெல்லிக்கனியை அவன் உண்பதற்கு முனைந்தபோது, வெளிப்புறத்தில் விருந்தொன்று வந்திருப்பதாகச் செய்தி கிடைக்கிறது. யார் அந்த விருந்தினர்? ஔவைதான்!

அப்போது அதியமானின் பரந்து விரிந்து உள்ளம் பேசுகிறது! என்ன பேசுகிறது?

"விருந்தினராக வந்தவரை வெளியே விட்டுவிட்டு சாகாத மருந்தாக இருந்த போதிலும் அதனைத் தான் மட்டுமே உண்பது விரும்பத்தக்கதல்ல!"

தான் மட்டும் உண்ணக்கூடாது – வந்த விருந்தினர்க்கும் அளித்துப் பகிர்ந்துண்ண வேண்டும் என்பதே விருந்தோம்பல் இலக்கணம் என்றாலும்கூட, வந்திருக்கும்

விருந்தினரோ தமிழ் விருந்து படைப்பவராயிற்றே; அதனால் அதியமான் அந்த நெல்லிக்கனியை, தான் உண்டு நீண்டகாலம் வாழ்வதைவிட ஔவை உண்டால் தமிழுக்குப் பயனுண்டு எனக் கருதி அந்தக்கனியை ஔவைக்கே வழங்கிவிடுகிறான்.

பகிர்ந்துண்ணும் விருந்தோம்பல் பண்புக்கே ஒருபடி மேலே சென்று சங்க இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டான் அதியமான்! ஆம்; சாவாமருந்தென ஔவைக்கு நெல்லிப்பழம் அளித்தவன் இலக்கியச் சாவா மருந்தால் என்றென்றும் உயிர் வாழ்கிறான்.

விருந்தோம்பல் சிறப்பினைக் கூறும் குறள் இதோ:



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
அவர்கள்

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."**

அதிகாரம்:9 விருந்தோம்பல் பாடல்: 82

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே..

புராணங்கள் காட்டும் சிவராத்திரி 5
புகழேந்திப் புலவரின் வைணவப் பற்று, ம. நாராயணன் 8
அமுதவாக்கு, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 12
வெந்நீர் அபிஷேகம் கொள்ளும் பொன்மலை நாதன்
எ. கிருஷ்ணன் 15
வாழ்வில் மேன்மைதரும் மேல்மலையனூர் அங்காளம்மன் 17
நரசிங்கப்பெருமாளின் நல்லருட்டிறன் 22
பஞ்ச ஆவரண பூஜை 26
தெப்போற்சவம் 28
மாசியில் அரண் அருள்பெற்ற நாயன்மார்கள் 30
பஞ்ச நந்திகள் 31
லிங்கோற்பவர் 32
உலகம் உய்ய உதித்த உடையவர் – பெ.ராமநாதபிள்ளை 34
பலவகையான சிவராத்திரி வழிபாட்டு காலங்கள் 36
எண்ணும் எழுத்தும் தரும் இன்னம்பூர் எழுத்தறிநாதர்
பனையபுரம் அதியமான் 37



புராணங்கள் காட்டும் சிவராத்திரி

மாசிமாதம் தேய்பிறை சதுர்தசி நாளில் கொண்டாடப்படும் மகாவிரதம் மகாசிவராத்திரி. அது கொண்டாடப் படுவதற்கான காரணத்தைப் புராணநூல்கள் பலவகையாக கூறுகின்றன. அவற்றுள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

1. பார்வதி இயற்றிய சிவராத்திரி

ஒரு காலத்தில் உலகம் அழிந்து, யாவும் சிவபெருமானுள் ஒடுங்கியது. அந்தகாரம் சூழ்ந்த அந்த இருளில் பார்வதிதேவியார் சிவபெருமானை ஆகமங்களில் கூறியுள்ளபடி நான்கு காலம் வழிபட்டார். அவ்வாறு அவரால் வழிபடப்பட்டதின் நினைவாகத் தொடர்ந்து சிவராத்திரி கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த இருளில் பார்வதிதேவியார், பரமனை நோக்கி இந்நாளில் நான் எவ்வாறு வழிபட்டேனோ அப்படியே வழிபடுபவர் களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் சொர்க்கமும் இறுதியில் மோட்சமும் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பரமசிவனும் அப்படியே ஆகட்டும் என்று அருள்பாலித்தார். அதன்படியே அன்று முதல் சிவசக்தி வடிவான சிவராத்திரி சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. பிரமதேவனும் திருமாலும் போற்றிய சிவராத்திரி

ஒரு சமயம் பிரமனின் பகற்காலமான சதுர்யுகம் முடிந்து அவர் உறங்கப் போனார். அதனால் உலகம் ஒடுங்கியது. சந்திர சூரிய விண்மீன்கள் யாவும் அழிந்தன. தேவர்கள் யாவரும் அழிந்தனர். பெரும்பிரளயமானது திரண்டு சகலபுவனங்களையும் அழித்தது. அப்போது சனலோகம் மட்டும் நிலைபெற்றிருக்க அதில் முனிவர்கள் மட்டும் பாதுகாப்பாகத் தங்கினர். அந்த அந்தகாரம் சூழ்ந்த இரவில் பிரமன் தூங்கினார். திருமாலும் பொங்கிய வெள்ள நீரில் மிதந்து வந்த வடவால விருட்சத்தின் ஆல்இலை மீது அழகிய குழந்தை வடிவுடன் உறங்கினார். இவ்வாறு ஆயிரம் சதுர்யுகங்களைக் கொண்டபிரம தேவனின் இரவுப்பொழுது முடிந்து பகற்பொழுது தோன்றியது. அப்போது சனலோகத்தில் இருந்த முனிவர்கள் திருமாலை வழிபட்டனர்.

ஆலிலையில் துயின்று கொண்டிருந்த பெருமாள் தம் உறக்கம் கலைந்து எழுந்தார்.

பிறகு திருமால் முன்போல உலகினைப் படைக்க எண்ணினார். அந்தக் கணமே பெருகிய வெள்ளம் வடிந்து கடல்கள் அதனதன் இடத்தில் முன்போல் நின்றன. அப்போது திருமால் தாம் படைத்த உலகினைக் காணாது வருந்தி ஒருகணம் யோகத்தில் ஆழ்ந்து அது கடலின் அடியில் இருப்பதைக் கண்டார்.

உடனே தான் ஒரு வலிய வெள்ளைப்

பன்றியாக வடிவம் கொண்டு கடலுக்கு அடியில் புகுந்து அதனைக் கலக்கி, தம் வலிய கொம்புகளினால் உலகத்தினை இடந்து மேலே கொண்டு வந்தார். பரந்து விரிந்த உலகத்தை நிலைப்படுத்திய பின்னர் தம்மைவிட இச்செயலை ஒருவராலும் செய்ய முடியாது என்ற இறுமாப்பு கொண்டார். பின்னர் ஓய்வெடுக்கக் கருதி பாற்கடலுக்குச் சென்று இரவு பகல் பாராது அறிதுயில் கொள்ளலானார்.

அவருக்கப் பின் எழுந்த பிரமதேவன் உலகில் அளவற்ற அசுரர், தேவர், மனிதர் விலங்குகள், முதலான ஜீவராசிகளையும் படைத்தார் இந்திரன் முதலான திக்பாலகர்களையும் படைத்து உலகினை நடைபெறச் செய்தார். பின்னர் அவர் ஒருசமயம் தான் படைத்த உலகினைச் சுற்றிப்பார்க்க அதனை வலம் வந்தார்.

இந்த உலகம் "நான் உறங்கினால் அழிந்து விடுகின்றது. நான் விழித்து எழுந்தால் தான் மீண்டும் படைக்கப்படுகின்றது". அதனால் நானே கடவுள் என்னைவிட மேலானவர் எவருமில்லை," என்று கர்வம் கொண்டார். அப்படியே வலம் வரும் போது பாற்கடலில் இதே எண்ணத்துடன் உறங்கும் திருமாலையும் கண்டார். உடனே அவருக்குக் கோபம் உண்டாயிற்று. என்னைவிட இவர் வலியவரா? என்று தனக்குள் கேட்டுக்கொண்டே அவர் அருகில் சென்று ஓங்கி அவர் மார்பில் அடித்தார். அவர் துணுக்குற்று எழுந்தார்.

அப்போது திருமால் கண்விழித்து பிரம்மனை நோக்கி," அன்பான மகனே! நான்தான் உன்னைப்படைத்தவன். உன் தந்தை" என்று கனிவுடன் கூறினார். அதைக் கேட்ட பிரமன் மேலும் கோபம் கொண்டார்.

அவரோடு வாய்ப்போரில் ஈடுபட்டார். திருமாலே! உன்னை நீயே பிரம்மமென்று கூறிக்கொள்கின்றாய். பத்து அவதாரங்களுக்கு மேல் எடுத்தவன் நீ. அப்போதெல்லாம் உன்னைப் படைத்தவன் நான். ஆதலின் உன்னையும் படைக்கும் ஆற்றல் உடையவனான என்னைப் பார்த்து வீண்வார்த்தை பேசாதே!" என்றார். அப்போது திருமால் அவரைச் சீறி, எனது வந்திக் கமலத்தில் உதித்த நீ என்னை விட பெரியவனா? என்றார்.

பிரமன் மேலும் சினம்கொண்டார். மாயனே! விறகில் தீ உண்டாவதால் தீயினுக்கு விறகு தந்தையாகி விடுமா? அதுபோல நீயும் நரசிம்ம அவதாரத்தில் தூணில் இருந்து தோன்றினாய். அதற்காகத் தூண் உனக்குத் தந்தையாகுமா?

உன் கொப்பூழ் தாமரையில் உதித்த என் தத்துவத்தை உணராது பிதற்றுகின்றாய்? என்று கேட்டார். இவ்வாறு இருவரும் சொற்போரிட்டு, இறுதியில் அது ஆயுதப்போராக முடிந்தது.

திருமால் சரமாரியாகப் பாணங்களைப் பிரமன் மேல் விடுத்தார். பிரமனும் சளைக்காமல் ஆயுதங்களைத் தொடுத்தார்.

திருமால் தம்முடைய நாராயண அஸ்திரத்தை ஏவ, பிரமன் அவர்மீது பிரம்மாஸ்திரத்தை ஏவினார். அவை இரண்டும் பயனற்றுப்போயின. பிறகு திருமால் சிவபெருமானிடமிருந்து பெற்ற பாசுபதாஸ்திரத்தை ஏவினார். பிரம்மன் மஹேஸ்வராஸ்திரத்தை ஏவினார். இரண்டு அஸ்திரங்களும் மோதிக் கொள்ளாமல் சிவபெருமானிடம் சென்று ஒடுங்கிவிட்டன.

தேவர்கள் அனைவரும் கூடி, இவர்கள் இருவரும் மோதிக்கொண்டு தாம் அழிவது மட்டுமின்றி உலகினையும் அழித்துவிடுவார்கள் என்று அஞ்சி சிவபெருமானிடம் சென்று மளித்து அவர்களுடன் யுத்தம் நடக்கும் இடத்திற்கு வந்தார். அவர்கள் இருவருக்கும் இடையே பெரிய ஒளிபொருந்திய நெருப்புத் தூணாக நின்றார். அதன் திடீர்ப் பிரவேசத்தையும் அதன் கோடிசூர்யப் பிரகாசத்தையும் கண்ட இருவரும் தம் சண்டைகளை விட்டுவிட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தனர்.

அப்போதும் திருமால் பிரம்மனை நோக்கி "நமக்கு இடையில் அதிமகிமை பொருந்திய மூன்றாவது ஒருவனும் இருக்கிறார். அவனாலேயே இது உண்டாக்கப் பட்டிருக்கின்றது. ஆகையால் இதன் அடியையும் முடியையும் முதலில் அறிவோம் என்று முடிவு செய்தனர்.

அதுவும் சரியே என்ற பிரமன் அன்ன

வடிவம் தாங்கி மேலே பறந்து சென்று அதன் உச்சியைக் காண விரைந்தார். திருமால் வலிய கொம்புகளை உடைய பன்றி வடிவம் கொண்டு பூமியை அகழ்ந்து மூலத்தைக் காண முயன்றார்.

மேலே சென்ற பிரமன் பெருங்காற்று வீசுவது போலச் சிறகுகளை வீசிக்கொண்டு விரைந்து பறந்தார்.

திருமால் பூமியைப் பிளந்து விடுவது போல ஆழமாகத் தோண்டிக் கொண்டே சென்றார்.

ஆண்டுகள் பலவாயின. அவர்களால் எதையும் காணமுடியவில்லை. உடலும் சோர்ந்து உள்ளமும் சோர்ந்து களைப் படைந்தார்கள்.

பிரமன் மனம் கலங்கி தன் அகங்காரம் அழிந்து தனக்கு ஏற்பட்ட ஞானத்தால் சிவபெருமானை உணர்ந்து அவரைத் தியானித்தார். அதுபோலவே திருமாலும் உடலும் உள்ளமும் சோர்ந்து சிவபெருமா னைத் துதித்தார். இருவரும் தங்களின் தோல்வியை ஒப்புக்கொண்டு பழையபடி பூமியை அடைந்தனர்.

அப்போது திருமால் இடப்பக்கமும் பிரமன் வலப்பக்கமும் நின்று சிவபெருமானை போற்றித் துதித்தனர்.

அவர்களோடு சேர்ந்து தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானின் எல்லையில் லாத சிறப்புகளைப் போற்றிப்பாடியும். ஆடியும், நெஞ்சம் நெகிழ்ந்து பலவாறு துதிசெய்தனர்.

பின்னர் சிவபெருமான் அந்த நெருப்பு தூணின் மையத்தில் மான், மழு, அபய, வர முத்திரை தாங்கியவராய்த் தோன்றினார் அவர்களை நோக்கி இனிமையுடன், "வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்றார்.

அவர்கள் மீண்டும் மீண்டும் சிவபெருமானை வணங்கித் தங்களின் பழைய படைத்துக் காக்கும் தொழிலையும் போரில் வெந்து அழிந்து போனதங்களுடைய ஆயுதங்களையும் மீண்டும் தரவேண்டுமென்று வேண்டினர்.

சிவபெருமான் அவர்கள் கேட்டபடியே வேண்டியவற்றை நல்கியதுடன், "அன்பர்களே

இன்று நான் உங்கள் முன்னே தோன்றி அருள்பாலித்த நாள் சிவராத்திரியாகும். இதுபோல் முன்னம் ஒரு சிவராத்திரி நாளில் தேவியும் என்னை அர்ச்சித்துப் பேறுபெற்றார்" என்றார்.

"இந்நாளில் ஆகமங்களில் கூறியுள்ளபடி பூசை செய்தால் நினைத்த நல்லவைகள் யாவும் நடக்கும். இது பாவங்களைத் தீர்த்து சிவகதிகாட்டும் மேலான பூசையாகும்", என்று சொல்லி அஸ்வமேதம் முதலான யாகங்களைச் செய்வதை காட்டிலும் நூறுமடங்கு அதிக பலனை இது தரும் என்று சொல்லி கயிலை மலையை அடைந்தார். இந்த சிவராத்திரி தினம் மாசி மாசத்து தேய்பிறை சதுர்த்தசி நாளாகும். இதனையே உலகத்திலுள்ளோர் சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர்.

இதனை சிவமகாபுராணம் பூர்வபாகம் உபமன்யு பக்தவிலாசம், மகாஸ்காந்தம், நாரதம் லிங்கபுராணம், முதலியன விரிவாகவும் சிற்சில மாறுதலுடனும் கூறுகின்றன. தமிழில் உள்ள கந்தபுராணம், அருணகிரிபுராணம், சிவராத்திரி புராணம், அருணாசலபுராணம் ஆகியவற்றிலும் காணலாம்.

*

புகழேந்திப் புலவரின் வைணவப் பற்று....

டாக்டர். வேலூர். ம. நாராயணன்

நளவெண்பா பாடிய புகழேந்தி தொண்டை மண்டலத்து, அதாவது இன்றைய செங்கற்பட்டு அருகிலுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்த இவர் (கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கூறுவர். பாண்டி நாட்டு அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். பாண்டியன் தன் மகளைச் சோழநாட்டு இளவரசனுக்கு மணம் முடித்துத் தந்தான். தன் மகளுக்குச் சீதனப்பொருளாக எண்ணற்ற செல்வங்களை வாரிவழங்கிய பாண்டியன், புகழேந்திப் புலவரையும் சேர்த்து அனுப்பி வைத்தான் இவ்வகையில் சோழ நாட்டிற்கு வந்த இவருக்கு ஏற்கனவே, சோழனின் அவைக்களத்திலிருந்த ஒட்டக்கூத்தருக்கும் கருத்து வேறுபாடு நிலவியது.!பல நிலைகளில் புலமைத்திறங்காட்ட இவர்கள் மோதிக் கொண்டனர். இவற்றிற்கெல்லாம் இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் ஏதும் இல்லை. அனைத்தும் செவிவழிச் செய்திகளாகவே உள்ளன.

உரையூரை அடுத்திருந்த மள்ளுவ நாட்டின் சிற்றரசனான 'சந்திரன் சுவர்க்கி' புகழேந்தியின் புலமையாற்றலைக் கண்டு வியந்தான் இவரைத் தமது அவைக்களப் புலவராக வீற்றிருக்கச் செய்து ஆதரவு அளித்தான். மகாபாரதக் கதையின் கிளைகதைகளுள் ஒன்றான நளச்சக்கரவர்த்தி கதையைக் காவியமாக இயற்றித் தருமாறு புகழேந்தியாரை அவன் வேண்டினான். புகழேந்தியார் 427 வெண்பாக்களில் நளவெண்பாவைக் காலத்தை வெல்லும் வகையில் இயற்றித்தந்து வற்றாத புகழை ஏந்திக் கொண்டிருக்கின்றார். இதற்கு இலக்கிய – வரலாற்றுச் சான்றாக இவரது நளவெண்பாவே திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்பது தமிழ் வரலாற்றில் சைவமும் வைணவமும் தழைத்தினிதோங்கிய காலமாகும். புகழேந்திப் புலவர் வைணவத்தைத் தழுவியவராகத் திகழ்ந்தார். தமது நளவெண்பாவில் ஒல்லும் வகையெல்லாம் திருமால் பெருமையைப் பாடிப் பரவியுள்ளார்.

சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்காண்டம் என மூன்று காண்டங்களாக விரிந்துள்ள நளவெண்பாவில் ஒவ்வொரு காண்டத்திற்கும் உரிய இறைவணக்கத்தில் வைணவத்திற்கு முதன்மை தந்து போற்றியுள்ளார். தொடர்ந்து சிவபெருமானையும், முருகனையும் போற்றிப்பாடித் தமது 'சமயப்பொதுமையையும்' நிலைநிறுத்தியுள்ளார்.

விநாயகரைப் போற்றிப் பாடிய பிறகே எந்தவொரு நல்ல செயலையும் தொடங்க வேண்டும். என்பது முன்னோர் மரபு! அந்த மரபைப் பிறழாத நிலையில் விநாயரைப் பாடி நளவெண்பாவைத் தொடங்கும் புகழேந்தி அடுத்த நிலையில் நம்மாழ்வாரைப் போற்றி வணங்குகின்றார்.

" நேசரிதங் கூற நிலவலயம்
தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாம் –
பேசரிய
மாமகிழ்மா றன்புகழாம் வண்தமிழ்வே
தம்விரித்த
மாமகிழ்மா றன்தாள் மலர்"

பராங்குசன், நாவீறுடைய பிரான், வகுளப்பிரான், குருகைப்பிரான், சடகோபன், மாறன் ஆகியன நம்மாழ்வார்க்கு வழங்கும் வேறு பெயர்களாகும். கொடிய வினைகளுக்கு மாறுபட்டவர் என்பதனால் 'மாறன்' எனப்பட்டார் நம்மாழ்வார். இப்பாடலில் மூன்றாம் தொடரில் வரும் மாறன்புகழாம் என்பதற்கு 'மால்–தன் புகழாம்' என்று பகுத்துப் பொருள் கொண்டால், திருமாலின் நீடிய புகழை வண்ணத்தமிழில் வேதமாக விரித்துப் பாடிய பெருமைக் குரியவர் என்று பொருள்படும். நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியைத் தமிழ்வேதம் என்பர் ஆன்றோர்.

இப்பாடலின் திரண்ட பொருள், எடுத்துச் சொல்வதற்கும் அருமையானது. திருமகள் மகிழும் திருமாலின் புகழைப்பாடுவது தமிழ்வேதமாம் திருவாய் மொழி, அதனை வழங்கியவர் மகிழமலர் அணிந்துள்ள நம்மாழ்வார். அன்பர்கள் இன்புறும் வண்ணம் பூபாகத்தைத் தாங்கிய நளனின் சரித்திரத்தை எடுத்துரைக்க அந் நம்மாழ்வாரின் திருவடிமலர்கள் எமக்குத்துணையாகுமாக...! என்பதாகும். தொண்டர்தம் பெருமை சொல்லவும் எளிதோ? என்ற நிலையில் திருமாலுக்கு முன்னதாக நம்மாழ்வாரைப் போற்றியுள்ளார் புகழேந்தி.

அடுத்த வெண்பாவில் திருமாலினை போற்றிப் பரவுகின்றார்

'ஆதித் தனிக்கோலம் ஆனான்
அடியவற்காச்
"சோதித் திருத்தூணில்
தோன்றினான் – வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே
என அழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை."

ஆதிநாளிலே ஒப்பற்ற பன்றி வடிவினனாகி இவ்வுலகைக் காத்தவன்: பிரகலாதனின் பொருட்டு ஒளிபொருந்திய தூணிடத்தே நரசிங்கமாக வெளிப்பட்டவன். வேதங்களின் முதன்மையான பிரணவப் பொருளாகத் திகழ்பவன். களிறாகிய வேழவேந்தன் 'ஆதிமூலமே' என்றழைக்கையில் என்னவோ எனக் கேட்டு விரைந்துவந்து முதலை வாயினின்றும் அவனைக் காத்தவன். திருமால்...

அவனே எமக்கும் இறைவன்: அவனை வணங்குவோமாக ..! என்கிறார் புகழேந்தி.

கலிதொடர் காண்டம் முதற்பாடல் திருமால் காப்பாக அமைந்துள்ளது. துயருற்ற யானைக்கும்,

ஆயர்குல மகளிர்க்கும், அழைப்பதற்கு முன்பாகவே சென்று உதவிய பாதம் திருமாலின் திருப்பாதமே! ஆனால் அவற்றையே மறைநூலின் திருமுடி என்றும், குருகூர், அதாவது ஆழ்வார் திருநகரியில் பிறந்த நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியைத் தலை என்றும் கொள்ளலாம். அத்தகைய திருப்பாதமே எமக்குத் துணையாகும்... என்கின்றார் புகழேந்தி.

முந்தை மறைநூல் முடியெனலாம்,
தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம்
– நந்தும்
புழைக்கைக்கும் நேயப் பொதுவர்
மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் அடி...!
(179)

இப்பாடலில் பயின்றுவரும் 'புழைக்கைக்கும்' என்பதில் புழை=துளை. அதாவது துளைக்கையுடையது யானை. அந்த யானையைக் காப்பாற்றியவர் திருமால் என்று புகழேந்தி பாடுவது நயஞ்செறிந்த தொடராகும்.

ஒருநாள், சந்தியாவந்தனம் செய்வதற்காகத் தன் பாதங்களை நளன் கழுவ அப்பொழுது ஒரு காலில் தண்ணீர் ஒரு சிறு இடத்தில் படாமல் போனது, இதுதான் தருணம் என்று, பார்த்துக்கொண்டேயிருந்த கலிமகன், அதாவது சனிபகவான் அவனைப்பற்றிக் கொண்டான். இது எப்படியிருக்கிற தென்றால் ஒன்றாய் எல்லாம் வல்ல மந்திரமாகிய நாராயணாய நம என்பதைத் துதித்துத் திருமாலின் திருவடியைச் சேராதவர்களைக் கடுந்துன்பங்கள் வந்து பற்றிக்கொள்ளும் அல்லவா? அதைப் போன்று இருக்கின்ற தென்கின்றார் புகழேந்தி:

'நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்
– பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை
கோமானைவாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.' *(211)*

அடுத்து கலிநீங்கு காண்டத்தில் முதல் பாடலாகத் திருமாலைப் போற்றுகின்றார் புகழேந்தி. செந்தாமரை போன்ற சிவந்த பாதங்களை உடையவர் திருமால் அவரை எங்கெங்கே காணலாம் தெரியுமா? அனைத்திற்கும் மூலப் பொருளாக விளங்கும் பழைமையான வேதத்திற்கு முன்பும் காணலாம் ஆயர்பாடியில் ஆனிரைகள் திரண்டுவரும் வேளையில் அவற்றிற்குப் பின்பும் காணலாம். அது மட்டுமா? கசேந்திரன் எனும் யானை வேத முதலே' என்றழைத்த போது வந்தருளிய பரந்தாமன் அவன் என்கிறார் புகழேந்தி.

'மூலப் பழமறைக்கு முன்னேயும்
காணலாம்
காலிக்குப் பின்னேயும் காணலாம்
– மால்யானை
முந்தருளும் வேத முதலே என
அழைப்ப
வந்தருளும் செந்தா மரை...! *(334)*

கலி நீங்கிய நிலையில் நளன் இழந்த தமது ஆற்றல்களையெல்லாம் திரும்பப் பெறுகிறான். மீண்டும் புட்கரனைச் சூதிற்கு அழைக்கின்றான். தன் கைவிரல் மோதிரத்தைப் பணயமாக வைத்து மறுபடியும் சூதாடி இழந்த தமது நாடு உட்பட அனைத்துச் செல்வங்களையும் பெறுகின்றான். அப்பொழுது அவனது மனநிலை, கருங்கடலில் யோக நித்திரை செய்கின்ற திருமாலை ஒத்திருந்தது என்கின்றார். அதாவது, அவனது முழுக்கவனமும் சூதாட்ட வெற்றியில் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தது என நாம் கொள்ளலாம்.

"தீது தருகலிமுன் செய்ததனை
யோராதே
யாது பணயம் எனவியம்பச் – சூதாட
மையாழி யுற்றுயிலும் மாலனையான்
வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து" *(421)*

இங்ஙனம் தமது காவிய நெடுகிலும் திருமால் பெருமைகளை உள்ள நெகிழ்ச்சியோடு பாடிப்பரவும் புகழேந்தியின் வைணவப்பற்று போற்றுதற்குரியதாகும்.

அட்டையில்,
திருவாவடுதுறை அணைத்தெழுந்தபிரான்

ஒரு சமயம் பார்வதிதேவியார் பசுவடிவம் கொண்டு பூவுலகத்திற்கு வந்து பல தலங்களில் சிவபெருமானை வழிபட்டாள். திருவாவடுதுறையில் வழிபட்ட போது இறைவன் அவளுடைய பசு உருவத்தை நீக்கி தேவமங்கை வடிவத்தை அடையும்படிச் செய்தார். அவளை அணைத்தவாறு காட்சி தந்தார். அந்தக் திருக்கோலமே அணைத்தெழுந்த நாதர் என்று அழைக்கப்படுகிறது. நிமிர்ந்து நிற்கும் அம்பிகையின் தோளை இடது கையால் தொட்டணைத்தவாறு காட்சியளிக்கிறார். வலது முன்கை அபயம் காட்டுகிறது. மேற்கரங்களில் மானும் மழுவும் திகழ்கின்றன. இப்பெருமானை ஆலிங்கன சந்திரசேகரர் என்று வடமொழி புராணம் கூறுகிறது.

இவர், ரதசப்தமிநாளில் இடபவாகனத்தில் பவனிவந்து தீர்த்தம் அளித்து திருவீதி உலா காண்கிறார். இவரை வணங்கும் தம்பதியர் மனமொத்து இல்லறம் நடத்திமேன்மை அடைவர்.

நூல் அறிமுகம்

திருமாமகள்– தலச்சிறப்பும் மகாலட்சுமி பற்றிய தகவல்களும் சென்னை, பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி திருக்கோயிலின் வெளியீடாக மலர்ந்துள்ள நூல் “திருமாமகள்”. செல்வத்தின் கடவுளான திருமகளின் பல்வேறு நிலைகளை இந்நூலில் ஆசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார். மகாலட்சுமியை ஆதாரமாகக் கொண்ட நம்பிக்கைகள், சகுனங்கள், வழிபாட்டுமுறைகள், பூஜை முறைகள் சுருக்கமாவும் தெளிவாகவும் எளிய இனிய நடையில் கதம்பமாக தொடுக்கப்பட்டுள்ளன.

முதலில் திருக்கோயிலின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து அஷ்டலட்சுமிகளின் பெருமைகள் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன. பிறகு ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள், ஆலயத்தில் செய்யப்படும் பரிகாரபூசை விளக்கங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

வாழ்வில் திருமகளின் அருளைப் பெற்று சிறப்புடன் வாழ கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் கூறப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக அருள்மிகு தாயாரின் 108 போற்றிகள் இடம்பெற்றுள்ளது.

அஷ்டலட்சுமிகள் சூழ மகாலட்சுமியுடன் மகாவிஷ்ணு காட்சியளிக்கும் வனப்புமிக்க முன் அட்டையும் வங்கக்கடல் அருகே பொலிவோடு தோன்றும் கோயிலின் முழு அழகைக்காட்டும் பின் அட்டையும் மிக அழகாக உள்ளன.

பெயர்: திருமாமகள். ஆசிரியர் : இரா. இரகுநாதன், விலை : ரூ.10/–
வெளியீடு: திருக்கோயில் வெளியீடு கிடைக்குமிடம் : அஷ்டலட்சுமி கோயில்
பெசன்ட்நகர்,சென்னை – 600 090



அமுத வாக்கு

பெரியவர்கள் வாக்கில் அமிர்தம் உண்டு. அதனால் அவர்கள் கூறிய சொல் அமிர்தமாகி அருள் புரியும், "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பது பழமொழி, அந்த வாக்கில் தான் எத்தனை ஆழம்! இதனை விளக்குவது இது.

புல்குடிசை; தெற்குப் பார்த்திருந்தது. தோட்டத்தில் வாழைகளும் இரண்டு தென்னைகளும் ஒற்றுமையாக நின்றிருந்தன தரை மட்டத்தில் ஒரு சிறு கிணறு அதன் அருகில் கரிய பானைகள் கவிழ்ந்திருந்தன. தோட்டத்தில் பனை மட்டைகள் வேலியாக நின்று, போர் வீரர்களைப்போல் அந்தக் குடிசைக்கு அரண் செய்தன.

அந்தக் குடிசையில் எலிக் குஞ்சுகளும் வறுமையுடன் வாழ்ந்தன. தெருப்பக்கம் ஒரு சன்னல்; அதில் ஒரு கதவு பாதி நைந்து ஒடிந்திருந்தது. அந்த வீட்டின் பழமைக்கு அது சான்று இதழ்போல் காட்சியளித்தது.

முத்துசாமி என்பவன் அந்தச் சன்னல் ஓரத்தில் உட்கார்ந்து நெசவு வேலைசெய்து கொண்டிருப்பான். வறுமையின் சிறுமையால் அதிகாலையிலேயே தன் வேலையைத் தொடங்குவான்.

பகல் பன்னிரண்டு மணிக்குத் தறியை விட்டு இறங்கிவந்து, கேழ்வரகுக்கூழ் குடிப்பான். அதற்கு ஊறுகாய் கூடக் கிடையாது. உலர்ந்த மிளகாய் வற்றலைக் கிள்ளி, அதில் இரு உப்புக்கல்லை வைத்து, வாயில்போட்டு மெல்லுவான். கண்ணில் நீர்த்துளிக்கும் அந்தக் காரத்தில் ஆகாரம் மடமடவென்று வயிற்றுக்குள் நுழைந்துவிடும்.

கையலம்பிக் கொண்டு அந்த ஈரம் உலர்வதற்குள் தறிக்குள் சென்று நெய்வான். நன்றாக இருட்டியபின் தான் அதைவிட்டு வருவான்.

இப்படி அன்றாடம் அவன் உழைப்பான். அப்படி உழைத்தும் அரை வயிறுதான். இந்தத் தரித்திர நிலையில் அவனுக்கு மூன்று பெண் குழந்தைகளும் நாலு ஆண் குழந்தைகளும் பிறந்தன.

அந்த ஊரில் அவர்களின் குலகுரு வந்து எல்லோருக்கும் தீட்சை கொடுத்து உபதேசம் செய்தார். முத்துசாமி மட்டும் அதில் கலந்து கொள்ளவில்லை. அவனுண்டு அவனுடைய வேலையுண்டு என்று இருந்தான்.

அவனுடைய மனைவி வந்தாள். "நம்ம குருமகான் வந்து எல்லோருக்கும் உபதேசம் செய்துவைக்கிறாரே, நீங்களும் போய்ச் செய்து கொள்ளுங்களேன். இந்த சந்தர்ப்பம் போனால் நமக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது" என்று சொன்னாள்.

"போடி! நம்ம பிழைப்பு எட்டிப் பார்த்தால் எட்டிழை குறையும். உண்டானவனுக்குத்தான் தீட்சையும் தெய்வமும். வறுமைப் பேய் நம்ம வீட்டில் வாசம் புரிகிறதே. தீட்சை வாங்கிக் கொண்டால், பக்தி சிரத்தையாக இருந்து அரைமணி நேரமாகிலும் அநுஷ்டானம் செய்ய வேணும், எனக்கு நேரம் ஏது?"

ஐந்து நிமிஷ நேரமாவது சுவாமியை நினைக்க வேண்டாமா? பல் விளக்க நேரம் இருக்கிறது; மலஜலம் கழிக்க நேரம் கிடைக்கிறது. உண்ணவும் உறங்கவும் நேரம் கிடைக்கிறது. இதில் ஐந்து நிமிஷம் அநுஷ்டானம் பண்ணமட்டும் நேரம் இல்லை என்றால் இது பொருந்துமா? மனம் இருந்தால் நேரமும் இருக்கும்."

இவ்வாறு மனைவி சொன்னதைக் கேட்ட முத்துசாமி, சரியென்று தறியை விட்டு, இறங்கி மேல் துண்டை எடுத்துக்கொண்டு நேரே குருநாதர் உள்ள இடத்திற்குச் சென்றான். அவரை வீழ்ந்து வணங்கினான்.

"சுவாமி! அடியேனுக்கு அதிக வேலை. தீட்சை வாங்கிக் கொண்டால் தினம் குளிக்க வேணும். அநுஷ்டானம் செய்யவேணும். வெகு சிரமமான வேலை. அடியேன் ஏழை. நெசவு ஜீவனம். எனக்குத் தக்கவாறு சுருக்கமாக உபதேசம் செய்து வைக்க வேணும்."

"அப்பா! முத்துசாமி! எழுந்தவுடன் தந்த சுத்திசெய்து, முகத்தில் திருநீறு இட்டுக்கொண்டு பத்துமுறை பஞ்சாட்சரம் சொல்லி விட்டு, அப்புறம் உணவைச் சாப்பிடு. இது போதும். உனக்கு நல்லருள் கிடைக்கும்."

"சுவாமி! இதை விடவும் சுலபமான உபதேசம் கிடையாதா?" என்று கேட்டான் முத்துசாமி.

குருநாதர் புன்னகை புரிந்தார்.

'அந்தோ! பஞ்சாட்சரம் பத்து முறை கூறக்கூட நேரம் இல்லையாம். இது என்ன உலகம்!' "அப்பா! திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த பிறகு தான் ஆகாரம் சாப்பிடுவது என்ற ஒரு கொள்கையையாவது வைத்துக்கொள்" என்று அருளினார் குருநாதர். இதற்கு முத்துசாமி இணங்கினான்.

ஏன்? அவனுடைய பக்கத்து வீடு ஒரு குயவனாருடையது. அந்த குயவனார் திருநீலகண்ட நாயனாரைப் போன்ற பரம சிவபக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக் கொண்டிருப்பார். அவர் யாசகப் பொடி வாங்க அடிக்கடி அவனுடைய சன்னல் பக்கம் வருவார் அதனால் தான் முத்துசாமி குருநாதரிடம் இந்தக் 'கடின' மான ஒரு நிபந்தனைக்கு உட்பட்டான். அதன்படியே இவன் தறியில் இருந்து நெய்யும் போது அந்தக் குயவனார் சன்னல் பக்கம் வந்து பொடி கேட்டார்.

திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பார்த்தவுடனே மனைவியைக் கூப்பிட்டுக் கூழ் கரைக்கச் சொல்லி, தறியில் இருந்தபடியே சாப்பிட்டு விடுவான். நெசவு வேலையில் கண்ணுங்கருத்துமாக இருந்து பஞ்சு படாத பாடுபட்டு அந்தக் குடும்பத்தை அவன் பாதுகாத்து வந்தான்.

ஒரு நாள் குயவனாருக்கு வீதியில் ஓர் அணா கிடைத்தது. அதற்கு அவர் பொடி வாங்கிக் கொண்டார். அதனால் அவர்

–திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இவனிடம் பொடி வாங்கவரவில்லை.

இவன் துடியாகத் துடித்தான். கடும்பசி காதை அடைக்கின்றது. பகல்மணி பன்னிரண்டு உச்சிவேளை. மனைவிமேல் சீறி விழுந்தான். "உபதேசம் செய்துகொள்ளச் சொல்லி என்னைச் செல்லரித்தாள்.

அந்தக் குயவன் இன்று எங்கே செத்தானோ? வந்து தொலையவில்லை. வயிறு கிள்ளுகின்றது. என்ன செய்வேன்?" என்று கூறி அங்காலாய்த்துக் கொண்டான்.

"போய் அவர் வீட்டில் தான், பார்த்து விட்டு வாருங்களேன்" என்றாள் மனைவி.

"சரி" என்று நாடாவைத் தறிமேல் வைத்து விட்டு எழுந்து ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு,

அடுத்த வீட்டுக்கு ஓடினான். அந்தவேளை குயவனார்களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். முத்துசாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது "பாவிப் பயல்! இந்த நேரம் பார்த்துப் போக வேணுமா? வேறு வழியில்லை" என்று கூறி விட்டு ஒரே ஓட்டமாக ஏரிக் கரைக்கே ஓடினான்.

அங்கே ஒரு பெரிய பள்ளம். அதில் குயவனார் மண் வெட்டி எடுக்கும் போது இரண்டு தங்கக் குடங்கள் இருந்தன. 'கணீர்' என்ற ஒலியுண்டாயிற்று. யாராவது பார்த்துவிட்டால் துன்பமாயிற்றே என்று மேலே நிமிர்ந்து பார்த்தார்.

முத்துசாமி அந்த நேரத்தில் "பார்த்து விட்டேன்!" என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம். ஆனால் அவன் தங்கக்குடத்தைப் பார்க்கவில்லை. விபூதி முகத்தைத்தான் பார்த்தான். வீட்டையடைந்து கூழ் குடித்தவிட்டுத் தறிக்குள் நுழைந்து கொண்டான்.

குயவனார் பதைத்துப் போனார். 'இவன் ஓடி மணியக்காரனுக்கோ, கணக்குப் பிள்ளைக்கோ, சொல்லி விட்டால் அரசாங்கம் இதனைப் பறிமுதல் செய்யுமே. கடவுளே! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகுமே!" என்று அஞ்சினார்.

இரு தங்கக் குடங்களையும் வண்டியில் வைத்து, மேலே வைக்கோலை மூடி, வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குள் கொணர்ந்து, மறைத்து வைத்தார்.

முத்துசாமியின் மனைவியைக் கூப்பிட்டு, 'அம்மா! ஏரியில் மண் எடுக்கும் போது இரு தங்கக்குடங்கள் கிடைத்தன. உன் கணவன் பார்த்துவிட்டு, 'பார்த்து விட்டேன்!' என்று சொல்லிவிட்டு ஓடினான்; அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லத்தான் ஓடினானோ, என்னவோ! நீயும் ஏழை. ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக் கொள்வோம்.

உன் கணவனிடம் சொல்லி இதை வெளிப்படுத்த வேண்டாம் என்று சொல். இந்தா, ஒரு குடம், நீ கொண்டு போ' என்று கொடுத்து விட்டார்.

பழம்புடவையால் மூடி, அவள் அதனைப் புழைக்கடை வழியாகக் கொணர்ந்து சமையல் அறையில் வைத்தாள். கணவனிடம் வந்தாள்.

"நீங்கள் ஏரிக்குப் போனீர்களே; என்ன பார்த்தீர்கள்?"

உன்தலை! உன்னால்தான் இந்தச் சடம் குயவனுடைய திருநீற்றைத்தான் பார்த்தேன்." கணவனை அழைத்துக் கொண்டு போய்த் தங்கக் குடத்தைக் காட்டினாள்– மூடியைத் திறந்தவுடன் அதில் மஞ்சள் மஞ்சளாக ஆயிரம் தங்க டாலர்கள் இருந்தன.

"பார்த்தீர்களா! வெறும் திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாக இந்த நலம் எய்தியது! நீங்களே திருநீறு பூசி வழிபாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே. 'நீரில்லா நெற்றி–பாழ்' என்கிறார் ஔவையார்.

ஆதலால் சைவர்கள் திருநீறும் வைணவர்கள் திருநாமமும் இட்டுக்கொள்ள வேணும். நெற்றிக்கு இட்டுக் கொள்வதனால் எத்தனையோ நலன்கள் எய்தும். இது நம் பாரதநாட்டு பண்பு ஆன்றோர் அமுதவாக்கு" என்றாள்.

அன்று முதல் முத்துசாமி முறையே அசார அனுஷ்டானங்களை மேற்கொண்டு திருநீறு பூசித் தெய்வமணம் கமழச் சிறந்து விளங்கினான்.

வெந்நீர் அபிஷேகம் கொள்ளும் பொன்மலை நாதன்

சிவபெருமானை அபிஷேக பிரியர் என்றும்; மகாவிஷ்ணுவை அலங்காரப் பிரியர் என்றும் சொல்வார்கள். பொதுவாகவே எல்லா கடவுளர்களுக்கும், பால், தேன், இளநீர், சந்தனம், பஞ்சாமிர்தம் என்று பலவிதமான பொருட்களால் அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், ஒரு திருக்கோயிலில் மட்டும் சிவலிங்கத்துக்கு தினமும் வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுகிறது என்பது மிகவும் ஆச்சரியமான தகவல்.

இக்கோயில் திருவண்ணாமலையிலிருந்து ஆரணி செல்லும் வழியில் தேவிகாபுரம் என்ற ஊரில் உள்ளது.





இறைவனின் பெயர் கனககிரீஸ்வரர். இவருக்கு தினமும் வெந்நீர் அபிஷேகம் செய்யப் படுகிறது. இதன் காரணம் என்ன என்பது அறிவோம்.

ஒரு காலத்தில் இந்த தேவிகாபுரம் என்ற ஊர் வெறும் காட்டுப் பகுதியாக இருந்தது. இந்தக் காட்டில் வேடன் ஒருவன் நிலத்தை அகழும்போது, கடப்பாறை குத்தி ரத்தம் கொட்டியது. இதைத் கண்டு அதிர்ச்சி அடைந்த வேடன் கவனமாக அங்கே தோண்டிப் பார்த்தான்,மண்ணுக் கடியில் சுயம்பு வடிவான சிவலிங்கம் இருக்கக்கண்டான். ரத்தம் வராமல் இருக்க பச்சிலைகளை அரைத்து இட்டான். மேலும் பச்சை தண்ணீர் பட்டால் அதன் காயம் பழுத்து விடுமோ, என்று கவலைப்பட்டான். அதனால் தினமும் வெந்நீர் கொண்டு லிங்கத்தை நீராட்டினான்.

காயம் குணமான பிறகும் தொடர்ந்து தினமும் வெந்நீர் அபிஷேகமே செய்தான். அந்த வழக்கமே இன்றும் இக்கோயிலில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்கின்றனர்.

மேலும் ஒரு வரலாற்றைக் காண்போம்.

இக்காட்டு வழியே போருக்குச் சென்ற மன்னன் ஒருவன் வேடனால் பூசிக்கப்பட்டுவரும் சிவலிங்கத்தின் பெருமையைக் கேள்விப்பட்டான். தான் மேற்கொள்ளும் போரில் வெற்றியடைந்தால் இந்த லிங்கத்துக்கு இவ்விடத்திலேயே கோயில் கட்டுவதாக வேண்டிக் கொண்டான். வேண்டுதலை சிவபெருமான் ஏற்று அருள்பாளித்தார் அதனால் அவன் ஈடுபட்ட எல்லா போர்களிலும் வெற்றி பெற்றான். வெற்றி பெற்ற சந்தோஷம், அவனுக்குக் கோயில் கட்டுவதில் ஞாபக மறதியைக் கொடுத்தது. சில காலம் கழித்து அவன் மிகப் பெரிய துன்பத்தை சந்திக்க

நேர்ந்தது. அப்போதுதான் அவனுக்குத் தன்னுடைய முன்னாள் வேண்டுதல் நினைவுக்கு வந்தது. உடனே இங்குவந்து லிங்கத்திற்குக் கோயில் கட்டினான். ஆனால் மூலவரை பிரதிஷ்டை செய்ய வேண்டிய நன்னாள் வந்தபோது அவன் வழிபட்ட சுயம்பு லிங்கத்தைக் காணவில்லை. சுற்று வட்டாரத்தில் எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

மன வேதனைப்பட்ட அரசன் அதற்கு மாற்றாக, காசியிலிருந்து வேறு ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வந்து அந்த கோயிலில் பிரதிஷ்டை செய்தான். ஆனால், என்ன அதிசயம், சிறிது காலத்திற்கு முன்பு காணாமல் போயிருந்த சுயம்பு லிங்கம் கிடைத்து விட்டது.

மன்னனின் மறதி அல்லது அலட்சியத்துக்கு மகேசன் கொடுத்த தண்டனையே இது? மன்னன் மிகுந்த உற்சாகத்துடன் அதை எடுத்து அதற்கு கனககிரீஸ்வரர் எனப் பெயர் சூட்டி அதே கருவறையில் பிரதிஷ்டை செய்தான். ஒரே கருவறையில் இரண்டு லிங்கங்கள் இப்போது உள்ளது குறிப்பிடத்தக்கதாகும் (வேறு பல தலபுராணங்களும் இத்தலத்திற்கு உள்ளன).

காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கத்திற்கு காசிவிஸ்நாதர் என்றும் சுயம்பு லிங்கத்திற்கு கனககிரீஸ்வரர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

இக்கோயில் சுமார் 500 அடி உயர குன்றின் மீது உள்ளது சுமார் 302 படிகளில் ஏறிச் சென்று இறைவனை தரிசிக்க வேண்டும். மலை மீது ஈசன் வீற்றிருக்கின்றார் இந்த மலைக்கு பொன்மலை என்பது பெயர் அதனால் இறைவனைப் பொன்மலைநாதர் என்று அழைக்கின்றனர் மூன்று நிலை ராஜகோபுரத்துடன் இக்கோயில் அமைந்துள்ளது.

இதில் நந்தி விநாயகர், முருகன், தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், வீரபத்திரர் சன்னதிகள் உள்ளன.

மலையடிவாரத்தில் கோகிலாம்பாள் சமேத காமேஸ்வரர் கோயில் உள்ளது. மலையில் அம்மன் சந்நிதி இல்லாததால் காமேஸ்வரர் கோயிலில் பிரதோஷ பூஜை நடைபெறுகிறது. பௌர்ணமி அன்று இறைவன் வீற்றிருக்கும் பொன்மலையை கிரிவலம் வந்தால் நோய்கள் தீரும் என்ற நம்பிக்கை உள்ளது.

மலையடிவாரத்தில் பெரியநாயகி அம்மனுக்குப் பெரிய கோயில் உள்ளது மலைக்கோயிலை விட பிரம்மாண்டமாக ஏழு நிலை ராஜ கோபுரமும், மூன்று பிரகாரங் களும் கொண்டது இந்த ஆலயம். அம்மன் இத்தலத்தில் தவம் இருந்து ஈசனை அடைந்ததால் திருமணம் ஆகாதவர் கிரிவலம் வந்து இந்த அம்மனை வழிபட்டால் திருமணத் தடைகள் நீங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

கோயிலின் முன்புறத்தில் இருக்கும் 36 கால் மண்டபம் ஒரு சிறப்பு கலைக்கூடமாகத் திகழ்கிறது.

இறைவனின் பல்வேறு விதமான தோற்றங்கள் இந்த மண்டபத்தின் பிரமாண்ட தூண்களில் சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. மேலும் மகா விஷ்ணுவின் தசாவதாரம் காட்சிகளை இங்கே காணலாம். இரணியனை மடியில் கிடத்தி ஆக்ரோஷமான முகபாவத்தோடு அவனைப் பிளக்கும் நரசிம்மர் அவதாரக் காட்சி ஒரு பக்கம் இருக்க, அதே தூணில் இன்னொரு பக்கத்தில் தேவி நரசிம்மரை சாந்தப்படுத்த அவர் சந்தோஷகோலத்தில் காட்சி தருகிறார். இதுபோன்ற எத்தனையோ விசேஷமான சிற்பங்களை இக்கோயிலில் காண்கிறோம். இவை நம் முன்னோர்களின் கலைத்திறனை விளக்கிக்கொண்டிருக்கின்றன.

திருவிழா:

பங்குனி உத்திரத்தில் பத்து நாள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது தைப்பூசத்தை முன்னிட்டு மூன்று நாள் திருமுறை விழா நடைபெறும். மகா சிவராத்திரி, திருக்கார்த்திகை நாளில் மலையில் தீபம் ஏற்றுதல், நவராத்திரி (ஒன்பது நாள்) போன்ற பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

(இங்கு சிவராத்திரியில் பெரிய விழா நடை பெறுகிறது)

– ஆன்மீக எழுத்தாளர் எ. கிருஷ்ணன், சென்னை – 5.

வாழ்வில் மேன்மை தரும் மேல்மலையனூர் அங்காளம்மன்

ஆதியுகத்தில் சிவபெருமானின் பிரம்மகத்தி தோஷம் நீக்கும்பொருட்டும், கலியுக மாந்தர்கட்கு அருள்பாலிக்கும் பொருட்டும், அன்னை பராசக்தி புற்று வடிவில் அங்காள அம்மனாக எழுந்தருளிய புண்ணியத்தலமே மேல்மலையனூராகும்.

அங்காளம்மன் வரலாறு சுருக்கம்:

ஆதியுகமான மணியுகத்தை ஆட்சி செய்து வந்தவள் ஏகஜகத் ஜோதியான ஆதிசக்தி.

சக்தி தனது மணிமந்திரங்களால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழிலை நடத்த பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐவரைப் படைத்தாள்.

இவர்கள் பஞ்ச பூதங்களைப் படைத்து பலவகை உருவங்களில் உலகை நடத்தினர். பிறகு பராசக்தி சிவனுக்கு ஈஸ்வரியையும், விஷ்ணுவுக்கு லட்சுமியையும், பிரம்மாவுக்கு சரஸ்வதியையும் துணையாக அளித்தாள்.

பிரம்மா படைப்பு தொழிலில் தனக்கு உதவி செய்ய 10 பிரஜாபதிகளைப் படைத்தார். இவர்களில் முதன்மையானவர் தட்சன், இவர் கோடானகோடி உயிர்களையும், முனிவர்களையும் படைத்தார். பிறகு இவருக்கு, ஆதிபராசக்தியின் அம்சமாகத் 'தாட்சாயிணி' என்ற பெண் தோன்றினாள். அவளை அவன் பரமசிவனுக்கு மணமுடித்தான். சிவனுக்கே தான் மாமனார் ஆகிவிட்டதால் தட்சன் அனைத்து சக்திகளையும் பெற விரும்பி ஒரு மகா யாகம் நடத்தினான், அந்த யாகத்திற்குச் சிவபெருமானை அழைக்கவில்லை. ஆணவம் கொண்ட தந்தை தக்கனை அடக்க தாட்சாயணி சிவன் தடுத்தும் கேளாமல், சக்தி அம்சத்தைச் சிவனிடம் நிலையாக நிறுத்திவிட்டு மாய உருவில் தட்சனுடைய யாகத்திற்குச் சென்றாள். சிவனை அழைக்காத தவறைச் சுட்டிக்காட்டியபோது தட்சன் அவளை பழித்துப்பேசி அவமானப் படுத்தினான்.

அதனால் கோபம் கொண்ட தாட்சாயணி தனது பூத உடலை யாகத்தில் வீழ்த்தி கருகி அழித்து, உருவமற்ற அவதாரமாக நிலைத்து நின்றாள் அவளுக்கு அங்காளி சக்தி என்பது பெயர்.

நடந்ததை அறிந்த சிவபெருமான் பெரும் கோபம் கொண்டு தாட்சாயணியின் கருகிய உடலை எடுத்து தன் தோள் மேல் போட்டுக் கொண்டு ஆங்கார நடனம ஆடினார்.

(அங்காள சக்தி சிவ பெருமானிடம் விட்டுவந்த ஆதிபராசக்தியின் அம்சத்துடன் இணைவதற்காகவே, பர்வதராஜன் மகளாகப் பிறந்து, பார்வதி என்ற பெயரோடு வளர்ந்து, பரமேஸ்வரனையே மணந்தாள்.)

ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி அம்மன் துணை
மேல்மலையனூர்

சிவன் பார்வதியின் மூலம் ஐந்து மணி மந்திரங்களை அறிந்து, பஞ்சமுக மந்திரத்தை உச்சரித்து பஞ்ச முக பரமசிவனாக ஆனார் அதை கண்ட நான்கு முகம் கொண்ட பிரம்மனும் எனக்கு ஐந்தாவது தலை வேண்டும் என்ற வரத்தைச் சக்தியிடம் கேட்டுப் பெற்றார்.

இதனால் பிரம்மா தான் சிவனுக்குச் சமமாக இருக்கிறோம் என்ற

அகங்காரத் தோடு விளங்கினார். ஒருசமயம் **'சந்தோபி சுந்தரர்'** என்ற இரண்டு அரக்கர்களின் கொடுமைகளில் இருந்து தேவர்களைக் காப்பாற்ற வேள்வி' ஒன்றை பிரம்மன் நடத்தினார். அந்த யாகத்தின் மூலம் **'திலோத்தமை'** என்ற தேவமங்கை தோன்றினாள்.

திலோத்தமையின் பேரழகில் மயங்கிய அசுரர் கூட்டம் அவள் பின்னே சென்றது. திலோத்தமையின் வடிவழகில் மயங்கிய பிரம்மாவும் அவளைத் தேடி ஓடினார் திலோத்தமை அடைக்கலம் தேடி கைலாசம் சென்றாள். பிரம்மாவும் விடாது கைலாயத்திற்குச் சென்றார்.

ஐந்து தலைகளுடன் எதிரேவருபவர் பரமசிவன்தான் என்று கருதிய பார்வதி அவரை வணங்கினாள். அப்போது சிவனும் ஐந்து தலையுடன் அங்கு வந்தார். பார்வதி குழப்பம்கொண்டு ஐந்து தலை உள்ளதால்

தானே இந்த தவறு நடந்துவிட்டது. ஆகவே பிரம்மனுடைய ஐந்தாவது தலை அழிக்க வேண்டும் என்று பரமசிவனிடம் முறையிட்டார்.

விஷ்ணுவின் யோசனைப்படி பிரம்மனிடம் சிவன் வலிய சண்டைக்குச் சென்றார். சண்டையில் பிரம்மனின் ஒரு தலையை வெட்டி எறிந்தார். கீழே தலை விழுந்தாலும் ஐந்தாவது தலை பிரம்மனுக்கு மீண்டும் முளைத்தது.

இப்படி சிவன் 999 முறை வெட்டிவீழ்த்தினார். மீண்டும் மீண்டும் தலைமுளைத்தது. கீழே விழுந்த 999 தலைகளையும் கோர்த்து மாலையாக அணிந்து கொண்டார். இறுதியாக சிவன் பிரம்மாவின் தலையை அறுத்தார். ஆனால் அதைக் கீழே போடாமல் கையில் தாங்கினார். பிரம்மாவே முன்புபோல நான்கு தலைகள் கொண்டவரானார்.

இதனால் சிவனுக்கு பிரகமத்திதோஷம் பிடித்தது. நடந்ததை அறிந்த சரஸ்வதி கோபப்பட்டு, சிவபெருமானைநோக்கி, "என் கணவரின் ஐந்தாவது தலை உன் கையை விட்டு கீழே விழாமல் ஒட்டிக் கொள்ளட்டும். உனக்கு அன்ன ஆகாரம், படுக்கை தூக்கம் எதுவும் இல்லாமல் போகட்டும். சுடுகாட்டின் மூன்று பிடி சாம்பல்தான் பசி தீர்க்கும்" என்று சாபமிட்டாள்.

சரஸ்வதி அத்துடன் நில்லாமல் பார்வதியை நோக்கி எனது கணவர் அலங்கோலமாக இருப்பதற்குக் காரணமான நீயும் அலங்கோலமாக போவாய். உடையின்றி, கொக்கின் சிறகும், மயில் தோகையும் சூடுவாய் உனது தாதிப் பெண்கள் பூதகணங்களாக போவார்கள். நீ பிணத்தை தின்று, மதுவை குடித்து அகோர உருவம் தாங்கி அலையவேண்டும் என்று சாபம் இட்டாள்.

இவை எல்லாவற்றையும், கண்ணன் மோகினி உருவத்தில் வந்து அறிந்தார். பார்வதியிடம் நீ மலையரசன் பட்டனத்தில் (மலையனூரில்) பூங்காவனத்தில் புற்றில் பாம்பு உருவாக இருக்கும்போது சாப விமோசனம் நடக்கும் வருந்தாதே என்று கூறினார்.

சரஸ்வதியின் சாபப்படி பார்வதிதேவி அகோர உருவத்தோடு நீண்ட ஜடாமுடி தரித்து உருமாறி நாடெல்லாம் அலைந்து திரிந்து திருவண்ணாமலையை வந்தடைந்தாள் அங்கே முனிவர் பார்வதி தேவிக்கு சில விபரங்கள் கூறினார்.

அதன்படி திருவண்ணாமலையில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி எழுந்தபோது அவளுடைய அகோர உருவம் நீங்கி மூதாட்டி உருவம் பெற்றார். பூதகணங்களும் பழையபடி பெண்களாயினர்.

மலையனூர் வந்தடைதல்:

திருவண்ணாமலையில் இருந்து மலையனூர் வரும் வழியில் தாயனூர் வந்தபோது இருட்டி விட்டது அன்று அங்குள்ள வட்டப்பாறையில் தங்கினாள். பின்னர் அங்கிருந்து அவள் மலையனூருக்கு வரும்போது வழியில் ஏரியில் மோதிரம் விழுந்து விட்டது அது கிடைக்காததால், இந்த ஏரியில் செடிகள் முளைக்கக் கூடாது என்று சபித்தாள் அதனால் இன்றுவரை ஏரியில் செடிகள் முளைப்பதில்லை.

அங்காளம்மன் மீனவர்களிடம் வந்தடைதல்:

மலையரசன் பட்டினத்தில் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களான தாசன் அவனுடைய மகன்கள் வீரன், சூரன், உக்கிரன் என்ற 4 பேர்களிடமும் பார்வதிதேவி சென்று உங்களுக்குக் கிடைக்கும் மீனை எனக்கு படைக்க வேண்டும் என்று சொல்ல 4 பேரில் வீரன் மட்டும் ஆசையை நிறைவேற்ற எண்ணினான். ஆனால் வீரன் தன் வலை ஓட்டை வலையாக உள்ளதை நினைத்து வருந்தினான்.

அன்னை வீரனிடம் நான் உனக்கு ஏராளமான மீன்களை தருகிறேன் என்றாள். அவன் மீன்களை பிடித்து அன்னைக்கு படைத்தான். இதன்பின் அன்னை அங்காளம்மன் அரண்மனைத் தோட்டத்தில் புற்றாக உருவெடுத்து அதில் 5 தலை நாக வடிவத்தில் இருந்தாள். இதை அறிந்து புற்றை வணங்கிய மீனவனான தாசனுக்கு அன்னை காட்சி கொடுத்தாள்.

அவர்களிடம் நான் சரஸ்வதியின் சாபத்தால் இங்கு இருக்கிறேன். நீங்கள் எனக்கு தினமும் பூஜை செய்யுங்கள், உங்கள் பரம்பரையை நான் பாதுகாக்கிறேன் என்று அருள்வாக்குத் தந்தாள். அதன்படியே இன்றும் மீனவர்கள் முறையாக அம்மனுக்கு பூஜைசெய்து வருகிறார்கள்.

இப்படி இருக்க, பூங்காவனத்திற்கு வந்த மலையரசன் அங்கே பெரிய புற்று இருக்கக்கண்டு அதை இடிக்க ஆள் அனுப்பினார். ஆனால் அன்னை அவர்கள் எல்லோரையும் புற்றுக்குள் மறைத்து விட்டாள். அஞ்சிய மலையரசன் வணங்கியபோது காட்சி கொடுத்தாள்.

சிவனுக்கு பிரம்மகத்தி தோஷம் நீங்குதல்:

மக்கள் புற்றுமண்ணை பிரசாதமாக அருந்தி பயன் பெறுவதை அறிந்த சிவன் மேல்மலையனூர் வந்தார். அங்கு மயானத்தில் 3 பிடி சாம்பல் சாப்பிட்டார். அவரது பித்தம், பசி ஓரளவு நீங்கியது. அதன்பிறகு புற்றுமுன் நின்று பிச்சை இடுங்கள் என்றார். சிவனின் குரல் கேட்ட பார்வதிதேவி மகிழ்ந்து தன் அண்ணன் விஷ்ணுவை மனதில் நினைத்து தியானம் செய்தாள் விஷ்ணு தோன்றி அவருடைய பிரம்மஹத்தியை நீக்கும் வழிமுறையைக் கூறினார்.

விஷ்ணுவின் உபதேசம்:

பார்வதியிடம் விஷ்ணு உன் கணவனுக்கு எதைக் கொடுத்தாலும் அவரது கையில் உள்ள பிரம்மகபாலம் தின்றுவிடுகிறது. அதனால் உணவை சமைத்து, அதை 3 கவளமாக்கி அதில் முதல் 2 கவளத்தை போட வேண்டும். 3-வது கவளத்தை அதில் கைத்தவறி கீழே போட்டுவிடுவது போல் தரையில் சிதறிவிட வேண்டும் என்றும் அப்போது உணவின் ருசியால் கவரப்பட்ட பிரம்மகபாலம் சிவனின் கையை விட்டு கீழே இறங்கி செல்லும்போது நீ பெரிய உருவம் எடுத்து அந்த பிரம்மக் கபாலத்தை காலால் நசுக்கி விடு. அதே நேரத்தில் சிவனைப் பிடித்த பிரம்மகத்திதோஷமும் நீங்கி விடும். நீ சாதம் சமைக்க லட்சுமியும், அவரிடம் உள்ள அமுதசுரபிப் பாத்திரமும் உதவியாக இருப்பார்கள் என்று சொல்லி மறைந்தார்.

பார்வதிதேவி அண்ணனின் வாக்குபடி லட்சுமி தேவியின் உதவியுடன் சாதம் தயார் செய்தார். தன் மூத்த மகன் விநாயகரை அழைத்து உன் தந்தையை வரவேற்று அக்னி குளத்தில் குளிக்கச் செய்து பின் சாப்பிடும் வரை பார்த்துக் கொள்ள வேண்டும் என்றாள். தாயின் சொற்படி விநாயகர் தன் தந்தையை பார்த்துக் கொண்டார்.

குளித்துவந்த சிவனுக்கு அங்காளம்மன் பாதபூஜை செய்து சிவனின் கையில் இருக்கும் கபாலத்தில் முதல் இரண்டு கவள சாதத்தைப் போட்டாள். உடனே அதை கபாலம் சாப்பிட்டு விட்டது. பிறகு அண்ணன் சொன்னபடி, மூன்றாவது கவளச்சோற்றை தரையில் இரைத்து விட்டாள், ருசிகண்ட பிரம்மகபாலம் சிதறிய அன்னத்தை எடுக்க சிவனின் கையை விட்டு தரைக்கு இறங்கியது. இதை எதிர்பார்த்த பார்வதி அகோர உருவம் எடுத்து ஆங்காரத்துடன் தன் வலது காலால் பிரம்மகபாலத்தை மிதித்துக் கொண்டாள்.

அலறிய பிரம்மகபாலத்திடம் இனி நீ என் காலடியில்தான் இருக்க வேண்டும். உனக்கு வேண்டிய உயிர் பலி எல்லாம் பின்னால் வரும் என்று கூறினாள், சிவனைப் பிடித்த பிரம்மகத்திதோஷம் நீங்கியதால் சிவன் சுயநினைவைப்பெற்று பேரானந்தம் கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடினார் சிவனுக்கு தாண்டேஸ்வரர் என்றும், அம்மனுக்கு தாண்டேஸ்வரி என்றும் பெயர் வந்தது.

வழிபடுதல் மற்றும் தனி சிறப்பு:

அங்காளம்மன் இத்தலத்தில் மகா மண்டபத்தில் புற்றாகவும், மூலஸ்தானத்தில் திருஉருவத்துடனும் இருக்கிறாள். அவள் அருகில் சிவனும் உள்ளார். இங்குள்ள புற்றுமண்ணை மக்கள் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர்.

உற்சவங்கள்:

ஒவ்வொரு ஆண்டும். ஆடி வெள்ளி, நவராத்திரி, கார்த்திகை தீபம், பொங்கல், மாசித் தேர் திருவிழா போன்ற முக்கிய திருவிழாக்கள் அன்னைக்கு வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கமாகும்.

வழிபாட்டு முறை:

இத்திருக்கோயில் பிரகாரங்களில் பொங்கல் இட்டும். அபிஷேகங்கள், அர்ச்சனைகள், மாவிளகககு வைத்து காணிக்கைகள் செலுத்தியும், ஆடு, மாடு, கோழி சுற்றி விடுதலும், பக்தகோடிகள் பலவாறாகத் தங்கள் வேண்டுதலை செலுத்தி வருகின்றனர். இத்திருக் கோயிலில் மயான சாம்பலுடன், குங்குமம், புற்று மண் ஆகியவைபிரசாதமாக வழங்கப்பட்டு வருகிறது.

சார்புக் கோயில்:

இத்திருக்கோயிலில் கோபால விநாயகர், அன்னபூரணி அம்மன் பாவாடைராயர், தெற்கே குளக்கரையின்மேல் அடி பெரியாண்டவர் சன்னதி ஆகியன அமையப் பெற்றுள்ளது.

கோயிலுக்கு வரும் வழி:

மேல்மலை யனூர் திருவண்ணமாலையில் இருந்து கிழக்கே 35 கி.மீ. தூரத்திலும், செஞ்சிக்கு வடக்கே 20 கி.மீ. தூரத்திலும், சென்னையில் இருந்து தென்மேற்கில் திண்டிவனம் வழியாக 170 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

இத்திருக்கோயிலில் தினமும் இரண்டு காலபூஜைகள் நடைபெறுகிறது.

மேல்மலையனூர் செல்வோம்,
வாழ்வில் மேன்மைகள் பல பெறுவோம்.

வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 14.1.2009 அன்று நடைபெற்ற தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் இந்துசமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்.

திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் 22.12.2008 அன்று மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரிய கருப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக சுற்றுச்சூழல் மற்றும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நரசிங்கப் பெருமாளின் நல்லருட்டிறன்

முன்னுரை:

திருமாலின் அவதாரங்கள் பத்தினுள், ஒவ்வொன்றிற்கும், தனித்தனிச் சிறப்பும், தத்துவ விளக்கமும் உண்டு. பெருமாள், அடியார்க்கு அருளும் இயல்பும், அடியவரின் பகைவரை ஒறுக்கும் பண்பும் வாய்ந்தவர். அடியவர்கட்கு அருளும் இயல்பை "ஆச்ரித அனுக்கிரக சீலம்" என்றும், அடியவரின் பகைவரை ஒறுக்கும் பண்பை 'ஆச்ரித விரோதி நிக்கிரக சீலம்" என்றும் பெரியவர்கள் குறிப்பிடுவர். இவ்விரு பண்புகளுக்கும் நிலைக்களமாக விளங்குபவர் நரசிங்கப் பெருமாள்.

அதனாலேயே அவர் மிக்க பெருமையும் சிறப்பும் உடையவராகப் போற்றப்படுகிறார். இத்தகைய சிங்கப்பிரானின் பெருமை, நம் அறிவு கொண்டு ஆராய்ந்து அளத்தற்கு உரியதன்று. ஆயினும், அதை நாம் இயன்ற அளவு ஆராய்ந்து உணர்ந்து அனுபவித்து மகிழலாம். இவ்வுண்மையினையே, "சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே" என வினாக் குறிப்பும், வியப்புக் குறிப்பும் அமைய, நம்மாழ்வார் நயந்து இனிது அருளிச் செய்கின்றார்.

"எங்கும் உளன் கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால்என்று இரணியன்
தூண்புடைப்ப,
அங்கு அப்பொழுதே அவன் வீயத்
தோன்றிய என் சிங்கப் பிரான்
பெருமை
ஆராயும் சீர்மைத்தே"
– நம்மாழ்வார்.

பொய்கையார்:

இரணியன் தன்னை இகழ்ந்ததனாலேயே, பெருமாள் அவனைக் கொன்றார் என்று பலரும் நினைப்பர். தம்மை இகழ்ந்தமைக்காகப் பெருமாள், இரணியனைக் கொன்றார் அல்லர்; தம் அடியவனாகிய பிரகலாதனை இரணியன் நலிந்தது தரிக்க மாட்டாமையினாலேயே, பெருமாள் இரணியனைக் கொன்றார்.

"வரத்தால் வலிநினைந்து மாதவநின்!
பாதம்
சிரத்தால் வணங்கானாம் என்றே?–
உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோன் ஆய
இரணியனை
ஓர் அரியாய் நீ இடந்தது ஊன்"



என வரும் பொய்கையாழ்வார் பாடல், இங்கு நாம் சிந்தித்தற்குரியது."மாதவனே! இரணியன் உன்னை இகழ்ந்து பழித்தான் என்பதற்கோ, அவனை நீ வதைத்தாய்? அதற்கான காரணம். அன்புப் பக்தர்களின் தலைவனான பிரகலாதனிடத்தில் அவன் பெரிதும் கொடுமை செய்து குற்றப்பட்டான் என்பதற்காக அன்றோ. அவனை வதைத் தாய்" என்பது இப்பாடலின் பொருள்.

எம்பெருமான் தோற்றம் மறைவு இரண்டும் இல்லாதவன். ஆயினும் ஆக்கல் அழித்தலை தன் உரிமையாகக் கொண்டவன். பிறவியற்றவன். அந்த பகவான் சீற்றத்தோடு நரசிம்மமாய்ச் சீறிய காலத்தில் அவனது அருளுக்கு இலக்காகி, பிரகலாதன் அவன் திருவடிகளைப் பற்றி அருள்பெற்றான்.

அருட்டிறம்:

பெருமாள், தம்முடைய அடியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது மட்டுமின்றி, தம்மைப் பகைப்பவர்களின் விருப்பங் களையும் கூட ஒரு வகையில் நிறைவேற்றி அருள்கின்றார் என்பது, நாம் உணர்தற்குரியது. "எங்குமுள்ளான் கண்ணன்" என்று இரணியன் தூண் புடைத்தான். அங்கு அப்பொழுது, அவனுடைய மனைவாசல் தூணில் பெருமாள் வெளிப்பட்டார். அவன் தட்டிய தூணில் தோன்றினார். அவன் தட்டிய இடத்திலிருந்தே புறம் போந்தார்.

பிரமன் படைப்பிற்குட்பட்ட எதனாலும் தான் இறக்கலாகாது என, இரணியன் விரும்பினான். அதனால், பிரமன் படைப்பில் இல்லாத மனித உடலும், சிங்க முகமும் கொண்டு ஆளரி (நரசிங்கம்) ஆகத் தோன்றினார். அஸ்திர சாஸ்திரங்கள் எதனாலும் தனக்கு இறப்பு நேர்தல் ஆகாது என்று இரணியன் விரும்பினான். அதனால் அவையிரண்டும் அல்லாத நகங்களைப் பெருமாள் பயன்படுத்தினார். இரவிலோ பகலிலோ, தான் இறத்தலாகாது என்றான். அதற்கு இசைந்து இரவும் பகலும் அல்லாமல், அவை இரண்டும் கூடிய சந்தியாகிய மாலை வேளையில், பெருமாள் அவனை ஒறுத்தார். வீட்டிலோ வெளியிலோ தனக்கு இறுதி விளைதல் ஆகாது என்றான். அதனால் வீடும் வெளியுமில்லாத வாயிற்படியில் பெருமாள் அவனைத் தடிந்தார். மண்ணிலோ வானிலோ தனக்கு முடிவு நேர்தல் கூடாது என்றான். அதற்காக மண்ணும் விண்ணும் அல்லாத, தம் மடியின் மீது வைத்து அவனைத் தடிந்தார். தம்மைப் பகைப்பவனின் விருப்பங்களையும் கூட, ஒரு வகையில் நிறைவேற்றி வைக்கும் அருட்பண்பு உடையவர் நரசிங்கப் பெருமாள் என்பது, இதனால் விளங்குகிறது.

எம்பெருமான்:

சிறந்த அரசர் முதலிய தலைவர்களுக்கும், கடவுளுக்கும் இன்றியமையாத பண்புகள் இரண்டு உண்டு. ஒன்று கொடியோர்த் தெறுதல் (துட்ட நிக்கிரகம்), மற்றொன்று செவ்வியோர்க்கு அளித்தல் (சிஷ்ட பரிபாலனம்). இவ்விரண்டு குணங்களும் தலைமைப்பாடுடைய தக்கோர் அனைவருக்கும், இன்றியமையாத சிறந்த தன்மைகளாகும்.

"நட்டோரை உயர்பு கூறினன்
செற்றோரை வழிதபுத்தனன்"

என வரும் புறநானூற்று வரிகளும் இவ்வுண்மையை உணர்த்துதல் காணலாம். பெருமாள், இவ்விரு தன்மைகளையும் "சிங்கப்பிரான்" ஆகிய இவ்வவதாரத்தில் சிறப்புற வெளிப்படுத்தி அருளியுள்ளார். செவ்வியோர்க்கு அளித்தலாகிய அநுக்கிரகமும், கொடியோர்த் தெறுதலாகிய நிக்கிரகமும் இவ்வவதாரத்தில் ஒரே சமயத்தில் ஒருங்கே நிகழ்ந்துள்ளன.

"தோற்றக் கேடவை இல்லவன்
உடையான்
அவன் ஒரு மூர்த்தியாய்
சீற்றத்தோடு அருள் பெற்றனன்
அடிக்கீழ்ப் புகநின்ற செங்கண்மால்"

எனவரும் திருவாய்மொழிப் பாசுர விரிவுரையில்,

"இரணியன் பக்கல் சீற்றமும் செல்லாநிற்கப் பிரகலாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே?" என்று சிலர் கேட்க, "சிம்மம் ஆனை மேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி இருக்கும்மிற்றே" என்று எம்பெருமானார் அருளிச் செய்தார். ஆச்ரிதவாத்சல்யத்தாலே அவர்களின் விரோதிகள் மேலே சீறின சீற்றமானால், பின்னை ஆச்ரிதர்களுக்கு அணையவொண்ணாதபடி இருக்குமோ?" என்று அவர் அருளிச் செய்தார்".

என்று இங்ஙனம் வரும் விரிவுரைப் பகுதியால், சிங்கப் பிரான் நிக்கிரகம் அனுக்கிரகம் ஆகிய இரண்டையும் ஒரு சேர நிகழ்த்தியருளிய திறன் தெளியலாம்.

நம்பிள்ளை உரைநயம்:

ஆராயும் சீர்மை அமைந்த சிங்கப்பிரானின் பெருமையினை, நம்மாழ்வார் வேறொரு பாடலிலும் நன்கினிது விளக்கியருள்கின்றார்.

"உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த
இரணியன்
அகல்மார்வம் கீண்ட என்
முன்னைக் கோளரியே! முடியாதது
ஏன் எனக்கே!"

என்பது நம்மாழ்வார் அருளிய ஒரு திருப்பாசுரம். இதன்கண் "உன்னை இகழ்ந்த இரணியன்" என்பதே அமையும். எனினும் "உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன்" என்று விதந்து கூறப்பட்டுள்ளது. இவ்விதப்புச்சொல் ஓர் ஆழ்ந்த பொருட்குறிப்பு உடையதாகத் திகழ்கிறது. நம்பிள்ளை என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் நயஞ்சான்ற அவ்வரும் பெறற் பொருட்குறிப்பினை விளக்கி அருளியுள்ளார்.

இறைவன், அன்பர்களுக்கு அருள் செய்தும், அன்பற்ற கொடியவர்களை ஒறுத்தும் வருகின்றான். இங்ஙனம் செய்யுங்கால் அன்பர்களிடத்தில் மனம் நிறைந்த பேரன்பின் திறத்தை எதிர்பார்த்தே அருள் செய்வதில்லை. "பொய்யே புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாகக் கொள்வானே" என்றபடி, போலி அன்பிற்கும்கூடப் பெரிதும் மகிழ்ந்து இறைவன் இன்னருள் புரிகின்றான்.

இவ்வாறே அன்பில்லாத கொடியவர்களைக் கடிந்து ஒறுப்பதிலும், வெளியே மேலுக்குத் தோன்றுகின்ற பகைமையைக் கொண்டே இறைவன் ஒறுத்து விடுவதில்லை. உள்ளபடியே அவர்களின் உள்ளத்திலும், பகைமையுணர்ச்சி ஆழ்ந்து படிந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, அதன் பின்னர்தான் இறைவன் அவர்களை ஒறுக்க முற்படுகின்றான்.

ஒருவனுக்கு அருள் செய்வதற்கு "என் பெயரைச் சொன்னான்"–"என் ஊரைச்சொன்னான்" என்றாற் போன்ற அற்பமான காரணம் ஏதேனும் ஒன்று இருந்தாலும் போதும்; அல்லது காரணம் இல்லாமலே கூட இருக்கலாம். இறைவனின் அருள் "நிர்ஹேதுக கிருபை" (காரணமில்லாத இரக்கம்) எனப்படும். ஆனால் ஒருவனைத் தண்டிப்பதற்கோ, மிகப் பெரிய வலிய சரியான காரணம் வேண்டும். நலம் செய்வதாயின், எவருக்கும் எதுவும் ஆராயாமலே நலம் செய்யலாம். ஆனால் ஒருவனுக்குத் தண்டனை தருவதாய் இருந்தாலோ, பல காலம் பல முறைகளில் தீரத் தெளிய ஆராய்ந்து பார்த்து, மன்னிக்க இயலாத மாபெரும் குற்றமே செய்துள்ளான் என்று அய்யத்திற்குச் சிறிதும் இடமின்றிச் செவ்விதின் தெளிந்து உறுதி செய்துகொண்ட பின்னர்தான், தண்டித்தல் வேண்டும். அதுவும் கூட, அவனை நன்றாகத் திருத்திக்காப்பாற்றி அருளுவதன் பொருட்டே, கடி தோச்சி மெல்லத் தண்டித்தல் வேண்டும்.

ஆதலின், பெருமாள், இரணியனின் பகைமை வெளிநோக்கில் மேல்போக்காக அமைத்ததோ அல்லது உள்ளத்திலேயே பெரியதும் ஆழ்ந்து படிந்து கிடந்ததோ என்று, நன்கினிது தீரத் தெளிய ஆராய்ந்து பார்ப்பதற்காகவே, இரணியனின் அகல்மார்பம் கீண்டுநோக்கி, அதன் பின்னரே இரணியனைக் கொன்றார் என்பது, இப்பாசுரத்தின் இனிய அரிய நுண் பொருளாகும். "உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பு அகலம் பிளந்திட்ட" என வரும் பெரியாழ்வார் திருமொழியிலும், "உளந்தொட்டு" என வருதல் இக்கருத்தினை

அரண் செய்து வலியுறுத்தியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது. இதனால் பெருமாளுக்கு நிக்கிரகம் செய்து தண்டிப்பதில் அல்லாமல், அநுக்கிரகம் ஆகிய அருள் செய்வது ஒன்றிலேயே, அதிகமான பெருநோக்கு என்பது தெளியலாம். இத்தகைய நல்லருட்டிறன் நரசிங்கப் பெருமாளின் திருவவதாரத்தில் சிறப்புற அமைந்து திகழ்கின்றது என்பது பெரியோர்களின் துணிபு.

முடிவுரை:

அருளுருவாய் அமைந்து திகழும் சிங்கப்பிரான் (1) லட்சுமி நரசிம்மர், (2) யோக நரசிம்மர், (3) சத்திரவட நரசிம்மர், (4) உக்கிர நரசிம்மர், (5) வராக நரசிம்மர், (6) பர்முலிதி நரசிம்மர், (7) பிரகலாத நரசிம்மர், (8) பார்க்கவ நரசிம்மர், (9) காரங்கி நரசிம்மர் என ஒன்பது வகைகளில் சிங்கவேள் குன்றம் என்னும் திவ்விய தேசத்தில், நவ நரசிம்மராக எழுந்தருளிக் காட்சி தரும் சிறப்பு, அன்பர்கள் அனைவரும் தரிசித்து மகிழற்பாலது.

"நாதனை நரசிங்கனை நவின்று
ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால், இவ்
வுலகம் பாக்கியம் செய்ததே"
பெரியாழ்வார்.

பஞ்ச ஆவரண பூஜை



பெருந்தெய்வங்களைப் பூசை செய்யும்போது அத்தெய்வங்களுக்குத் துணைத் தெய்வங்களாகவும், ஏவலர்களா கவும், காவலர்களாகவும் உள்ள தெய்வங்களையும் பூசிப்பது வழக்கம். இத்துணைத்தெய்வங்கள் தலைமைத் தெய்வத்தைச் சுற்றி படிப்படியாக அமைந்துள்ள வீதிகள் அல்லது ஆவரணங்களில் வீற்றிருப்பர். இந்த ஆவரணங்களைப் பூசித்து அதன்பிறகு மையத்தில் உள்ள தெய்வத்தைப் பூசிப்பதே ஆவரணாதி பூசை எனப்படும்.

பராசக்தியான தேவியைச் சுற்றி ஒன்பது ஆவரணங்களும், காளியைச் சுற்றி எட்டு ஆவரணங்களும் அமைந்துள்ளதைப் பூசை நூல்கள் கூறுகின்றன. இவை முறையே நவாவரண பூசை, அஷ்டாவரண பூசை என அழைக்கப்படுகின்றன. சிவபூசையில் பல ஆவ்ரணங்கள் இருந்தாலும் குறிப்பிடத்தக்க ஐந்து ஆவரணங்களை மட்டும் இப்போது நடைமுறையில் பூசை செய்கின்றோம். இதனைப் "பஞ்சாவரண பூசை" என அழைப்பர்.

இனி சிவபெருமானைச் சுற்றி அமையும் இந்த ஆவரணம் எனப்படும் சுற்று

வீதிகளையும் அவற்றில் அமைந்துள்ள துணைத்தெய்வங்களையும் காணலாம்.

சிவபெருமானைச் சுற்றி அமைந்துள்ள முதல் ஆவரணம் அனுக்கச் சுற்று எனப்படும். இதில், பஞ்சப் பிரம்மங்களும் ஆறு அங்கங்களும் பூசிக்கப்படுகின்றன. பஞ்சப்பிரம்மங்கள் என்பவர் ஐந்து முகங்களுக்குரிய ஈசானர், தத்புருஷர், வாமதேவர், அகோரர், சத்யோஜாதர் ஆகிய மூர்த்திகளும், ஆறு அங்கங்கள் என்பன.

சிவபெருமானின்
ஹ்ருதயவடிவான ஞானசக்தி;
சிரசுவடிவான ஆதிசக்தி;
சிகையான பராசக்தி;
நேத்திரமான இச்சாசக்தி;
அத்திரமான கிரியாசக்தி;

இவற்றை சுற்றி விளங்கும் கவசம் ஆகிய கவச சக்தி ஆகியவையாகும்.

இரண்டாவது ஆவரணத்தில் நான்கு முகமும் பத்துகைகளும் கொண்டு பத்மாசனத்தில் வீற்றிருப்பவர்களான எண்மர் வீற்றிருக்கின்றனர். இவர்களை அஷ்டவித்யேசுவரர் என அழைப்பர். இவர்கள் 1. அனந்தர் 2. சூக்ஷமர் 3. சிவோத்தமர் 4. ஏகநேத்திரர் 5. ஏகருத்திரர் 6. திரிமூர்த்தி 7. ஸ்ரீகண்டர் 8. சிகண்டி என எண்மராவர்.

மூன்றாவது ஆவரணத்தில் கிழக்கில் நந்திதேவரும், தென்கிழக்கில் மகாகாளரும், தெற்கில் பிருங்கியும் தென்மேற்கில் விநாயகரும், மேற்கில் விருஷபரும், வடமேற்கில் ஸ்கந்தரும், வடக்கில்தேவியும், வடகிழக்கில் சண்டேசுவரரும் எழுந்தருளியுள்ளனர்.

நான்காவது ஆவரணத்தில் தசதிக் பாலகர்கள் எழுந்தருளியுள்ளனர். கிழக்கில் இந்திரனும், தென்கிழக்கில் அக்னியும், தெற்கில் யமனும், தென்மேற்கில் நிருதியும், மேற்கில் வருணனும், இவ்விருவர்களுக்கு இடையில் பிரமனும், வடமேற்கில் வாயுதேவனும், வடக்கில் குபேரனும், வடகிழக்கில் ஈசானனும் அவருக்குத் தெற்கில் விஷ்ணுவும் எழுந்தருளியுள்ளனர்.

ஐந்தாவது ஆவரணத்தில் தசாயுதங்கள் வைத்து பூசிக்கப்படுகின்றன. இவை வஜ்ஜிரம் (கிழக்கு), சக்தி (தென்கிழக்கில்), தண்டாயுதம் (தெற்கு) கத்தி (தென்மேற்கு), பாசம் (மேற்கு), கொடி (வடமேற்கு), கதை (வடக்கு), திரிசூலம் (வடகிழக்கு), பத்மம் (கிழக்கு வடகிழக்கிற்கு நடுவில்), சக்கரம் (தென்மேற்கு மேற்கிற்கு இடையில்) எனப் பத்தாகும்.

இந்த ஐந்து ஆவரணங்களை கும்பாபிஷேகம் முதலான சிவவேள்விச் சாலையில் மந்திரப்பூர்வமாக வழிபாடு செய்கின்றனர். யாகசாலைகளில் இத்தேவர்களின் முழு உருவங்களை வைப் பதற்குப்பதில் பூரண கும்பங்களை வைத்து வழிபடுவர். சில சிவ பூஜா துரந்தரர்கள் நித்திய பூசையிலும் பஞ்சாவரணங்களை மந்திரப்பூர்வமாகப் பூசைசெய்கின்றனர்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ. 10/-
ஓராண்டு சந்தா	ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா	ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா	ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா	ரூ. 1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ. 15,000/-
2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 7,500/-
4.உட்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
5.உட்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

தெப்போற்சவம்

மக்கள் மகிழ்வுடன் நீர்ப்பரப்பின் மீது பயணம் செய்ய அமைந்தவை ஓடம், படகு, கப்பல் முதலியனவாகும். ஆறுகளில் ஒரு கரையிலிருந்து மறுகரைக்குச் செல்ல உதவுவது ஓடம். நாவாய், பரிசல் முதலியனவாகும். கடலில் பயணம் செய்து ஒரு நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்குச் செல்ல உதவுபவை கப்பல், கலன் முதலியவை.

குளங்களில் இறை உருவங்களை எழுந்தருளச் செய்து சுற்றிவரச் செய்து விழாக் காண உதவுபவை தெப்பங்களாகும். தெப்பம் என்பதற்கு மிதவை என்பது பொருள்.

தெப்பங்களை மிதக்கவிட்டு விழாக் களைக் கொண்டாட உதவும் குளங்களை மக்கள் தெப்பக் குளங்கள் என அழைக்கின்றனர். திருச்சியில் உள்ள தெப்பக்குளம், திருவாரூர் கமலாலயம், மயிலாப்பூர் கபாலி தீர்த்தம், மதுரை வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் முதலியன புகழ்பெற்ற தெப்பக் குளங்களாகும். இவற்றில் ஆண்டு தோறும் தெப்பத் திருவீழா கொண்டாடப்படுகிறது.

தெப்பம் என்பவை மிதந்து வரும் கருவறை போன்ற அமைப்பாகும். நடுவில் கருவறைக்கு மேல் இருப்பது போல் இரண்டு அல்லது மூன்று தளங்களுடன், அழகிய கிரீவமும் அதன்மீது கலசமும் கொண்டதாக விமான்ம் அமைக்கப்பட்டிருக்கும். நடுப்பகுதியைச் சுற்றி நாற்புரமும் மண்டபம் போன்று அமைத்திருப்பர். இவை யாவும் லேசான மரத்தால் செய்யப்பட்டவை. எளிதில் பிரித்து இணைத்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டவை. வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் காட்சியளிப்பவை. பார்ப்பதற்குப் பதினாறுகால் மண்டபம் போலவே இருக்கும். மண்டபத்தின் விளிம்பில் சாலை, மஞ்சரம், கூடு போன்றவை அமைக்கப்பட்டு அங்கு நந்திகள், அப்சரப் பெண்கள், பூதங்கள், தேவர்கள், கந்தர்வர்கள் வடிவங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

நடுவில் அமையும் விமானத்தில் பிரம்ம, விஷ்ணு, தட்சிணாமூர்த்தி, முருகன், கோபுரம் தாங்கிகள், இடபங்கள், கந்தர்வர்கள் முதலிய வடிவங்களை அமைக்கின்றனர்.

விழாவின்போது மிதவைகளைக் கட்டி

அதன்மீது இந்த மண்டபத்தை நிர்மாணிப்பர். இவற்றிற்கு மேலும், அழகூட்ட வாழை மரங்கள், பாக்குப் பாளைகள், கமுகம் பாளைகளைக் கட்டுவர். பனங்குலை, தென்னங் குலைகள், மாவிலைத் தோரணங்களையும் கட்டுகின்றனர்.

முன்னாளில் ஆங்காங்குத் தீப்பந்தங்களையும், கண்ணாடி விளக்குகளையும் பொருத்தி வைப்பது வழக்கம். பௌர்ணமி நிலவொளியில் தீப்பந்தங்கள் சுடர்விட தெப்பம் மிதந்து வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்நாளில் மின் விளக்குகளைப் பொருத்தி வனப்பூட்டுகின்றனர்.

தெப்பத்திருவழா மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது நாட்கள் வரை நடைபெறுகின்றது. முதல்நாள் அங்குரார்ப்பணம், வாஸ்து சாந்தி முதலியவை நடைபெறும். மறுநாள் பிற்பகலில் மகா அபிஷேகமும் சிறப்பு அலங்காரமும் நடைபெறுகின்றன. பின்பு பெருமான் வீதிவலம் வந்து குளத்திற்கு எழுந்தருள்வார். தீபாராதனை நடத்தி தெப்பத்துக்குள் பெருமானை எழுந்தருளச் செய்கின்றனர்.

முதல்சுற்றில் வேத மந்திரங்கள் முழங்கும். இரண்டாம் சுற்றில் திரு முறைகள் பாடப்படும். மூன்றாம் சுற்றில் மேளக்கச்சேரி நடைபெறும். சில இடங்களில் பாட்டுக் கச்சேரி, நாட்டிய நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றனர்.

சில தலங்களில் முதல்நாள் விநாயகரும் இரண்டாம் நாள் சிவபெருமானும் மூன்றாம் நாள் அம்பிகையும், நான்காம் நாள் முருகப்பெருமானும், ஐந்தாம் நாள் திருமாலும் தெப்பத்தில் வலம் வருகின்றனர்.

திருவண்ணாமலையில் முதல் நாள் அண்ணாமலையாரும், இரண்டாம் நாள் பராசக்தியும் மூன்றாம் நாள் முருகனும் தெற்போற்சவம் காண்கின்றனர்.

திருவாரூரில் உள்ள தெப்பக்குளம் கமலாலயம் என்று அழைக்கப்படுகிறது. அதன் நடுவில் நீராழி மண்டபத்திற்குப் பதிலாக நடுவணநாதர் ஆலயம் உள்ளது. இக்குளத்தில் பங்குனித் திருவிழா முடிந்ததும் தெற்போற்சவம் கொண்டாடுகின்றனர். தெப்பத்தில் கல்யாணசுந்தரர் பவனி வந்து அருள்பாலிக்கின்றார்.

தெப்பக்குளத்தில் கரைகளில் கைப்பிடிச் சுவர் அமைத்துள்ளனர். நாற்புறமும் படிகள் சீராகக் கட்டப்பட்டிருக்கும். குளத்தின் நடுவில் உயரமான மேடை அமைத்து அதில் அழகிய மண்டபத்தையும் அமைத்துள்ளனர். அதற்கு நீராழி மண்டபம் என்பது பெயர். அதுவும் 16 கால்கள் கொண்டதாக

ஸ்ரீவிமானத்துடன் விளங்குகிறது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தைப்பூசத்தைக் கடைநாளாகக் கொண்டு கொடியேற்றிப் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாளில் வண்டியூர்மாரியம்மன் குளத்தில் தெப்போற்சவம் கொண்டாடப்படுகிறது.

தைப்பூசத்தில் தெப்போற்சவம் கொண்டாடப்படுவது நெடுங்கால வழக்குமாகும். பின்னாளில் பெருந்திரு விழாவின் அங்கமாக இவ்விழா நடைபெறலாயிற்று. திருவான்மியூர், திருவாரூர், திருவண்ணாமலை முதலான இடங்களில் பெருந்திரு விழாவைத் தொடர்ந்து தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.

திருத்தணிகையில் ஆடிக் கிருத்திகையை யொட்டி தெப்பத் திருவிழா கொண்டாடப் படுகிறது.

மாசியில் அரன் அருள்பெற்ற நாயன்மார்கள்

எறிபத்த நாயனார் - மாசி - அஸ்தம்

காரி நாயனார் - மாசி - பூராடம்

கோச்செங்கட்சோழ நாயனார் - மாசி - சதயம்

பஞ்ச நந்திகள்

பெரிய சிவாலயங்களில் ஐந்து வகையான நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவை முறையே **இந்திர நந்தி, வேதநந்தி** (எனும் பிரம்மநந்தி) **ஆத்மநந்தி** (கொடிமரத்தின் அருகில் உள்ளது) **மால்விடை** (மகாமண்டபத்தில் இருப்பது), தருமநந்தி என்றழைக்கப்படும்.

ஒரு சமயம் இந்திரன் இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். போகங்களின் அதிபதியாகிய இந்திரன் வடிவாக விளங்கும் இந்த நந்தியைப் போகநந்தி என்றும் இந்திரநந்தி என்றும் அழைக்கின்றனர். இந்த நந்தியை கோயிலுக்கு வெளியே சற்று தொலைவில் கருவறையை நோக்கியவாறு அமைக்கின்றனர்.

பின்னும் ஒருமுறை பிரமதேவன் நந்தி வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். வேதனான பிரமன் நந்தி வடிவம் தாங்கியமையால் இந்த நந்தியை வேதநந்தி, வேதவெள்விடை, பிரம்மநந்தி என்று பலபெயர்களால் அழைக்கின்றனர். பிரம்மம் என்பதற்கு 'அளவிட முடியாத பெருமைகளை உடையது' என்பது பொருளாகும். அதற்கேற்ப இந்த நந்தியை மிகப் பெரியதாகவும் கம்பீரமானதாகவும் அமைப்பர். இந்த நந்தியைச் சுதையினாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் மிகப் பெரிய அளவில் அமைக்கின்றனர். ராமேஸ்வரம், காஞ்சீபுரம் முதலான தலங்களில் இத்தகைய பிரும்மாண்டமான வேத வெள்விடையை பெரிய மண்டபத்துள் காணலாம்.

மூன்றாவதாக ஆலயத்தில் கொடி மரத்தையொட்டி தலைமை நந்தியாக அமையும் நந்தி 'ஆன்ம நந்தி' எனப்படும். இது உலக உயிர்களான (பசுக்கள் எனப்படும்) ஆன்மாக்கள் பதியாகிய சிவபெருமானைச் சார்ந்து அவனுடைய நினைவில் நிலைபெற்றிருக்க வேண்டிய தன்மையை உணர்த்துகிறது. சிவாலயத்தில் பிரதோஷக் காலங்களில் இந்த நந்திக்குத்தான் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.

இனி நான்காவதான மால் விடையைக் காணலாம். ஒருசமயம் திரிபுராதிகளை வெல்லுவதற்காக தேவர்கள் சிவபெருமானுக்கு சிறந்ததொரு தேரினைச் செய்து கொடுத்தார்கள். தாங்கள் அளிக்கும் இந்தத் தேர் இல்லாமல் சிவபெருமானால் முப்புரங்களை வெல்ல முடியாது என எண்ணினர். அதை உணர்ந்த சிவ பெருமான் அந்தத்தேர் தட்டின் மீது தன் வலக்காலை ஊன்றி ஏறினார். அவ்வாறு அவர் ஊன்றிய போதே அத்தேரின் அச்சு மள மள வென்று முறிந்தது. தேவர்கள் தாங்கள் செய்தளித்த ஒப்பரிய தேர் பெருமானின் ஒரு கால அழுத்தத்தைக் கூட தாங்க மாட்டாமல் முறிந்தது கண்டு அஞ்சி பெருமானைத் தொழுதனர். அப்போது திருமால் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத்தாங்கி அவரை மகிழ்வித்தான். இந்நினைவு நீங்காது இருக்கும் பொருட்டு தானும் நந்தி வடிவம் கொண்டு அவர் சன்னதியில் நிலையாக எழுந்தருளினான். இந்த நந்தி சக்தி பதமான இரண்டாவது ஆவரணத்துள் அமைந்துள்ளதாகும். இதனை மால்விடை, மால்வெள்விடை என்று பலவாறு அழைப்பர்.

ஐந்தாவதாக மகா மண்டபத்தில் அமையும் சிறு நந்தியே தரும நந்தி என்பதாகும். உலகம் சிவபெருமானிடத்தே ஒடுங்குகின்ற சங்கார காலத்தே உலகம் யாவும் அழியும். பிரளய வெள்ளம் பொங்கிப் பெருகி வானளவு எழுந்து உலகினை அழக்கும் அந்த சங்கார காலத்தில் யாவும் சிவபெருமானிடம் ஒடுங்கும்.

அப்போது தருமம் மட்டும் நிலைபெற்று இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கும் இடபத்தை பெருமான் ஆரத்தழுவிக் கொள்வான்.

இவ்வகையில் தரும நந்தியானது இறைவனைப்பிரியாது அவனுடனேயே இருக்கும். இதை உணர்த்தும் வகையில் இந்த நந்தி இறைவனுக்கு அருகாமையில் மகா மண்டபத்திலேயே எழுந்தருளியிருக்கின்றது.

பெரிய ஆலயங்களில் இத்தகைய ஐந்து நந்திகள் இருப்பதைக் காண்கிறோம்.

இவை தவிர உட்கோபுர வாயிலின் உட்பகுதியில் வடக்கு நோக்கியவாறு அதிகார நந்தியும், கருவறைக்கு பின்புறம். விருஷபர் என்கின்ற நந்தியும் இருக்கக் காண்லாம். ஆதலின் பூரணமான சிவாலயத்தில் ஏழு நந்திகளை அமைக்க வேண்டும். என்பது தெரியவருகிறது.

லிங்கோற்பவர்

உமாமகேசுவர விரதகாலத்தில் உமா மகேசுவரரையும், திருவாதிரையில் நடராசரையும், திரிசூலவிரதத்தின்போது அஸ்திரதேவரையும், வழிபடுவதுபோலவே சிவராத்திரியின் மூன்றாவது காலத்தில் லிங்கோற்ப மூர்த்தியை வழிபட வேண்டும். இதனால் சிவராத்திரியின் மூன்றாவது காலம் லிங்கோற்பவ காலம் என்றே அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் சிவபெருமான் நெருப்புத்தூண் நடுவில் இருந்து மான், மழு அபயவரத முத்திரைகளுடன் உருவம் தாங்கி அருள்பாலித்தார். லிங்கம் என்ற சொல்லுக்கு உருவம் என்பது பொருள். உருவம் தாங்கி சிவபெருமான் வெளிப்பட்டு அருள்பாலித்ததால் இது லிங்கோத்பவம் என அழைக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள புராணக்கதைகளின் அடிப்படையில் அமைந்ததே லிங்கோற்பவ மூர்த்தி' வடிவமாகும். இது சிவலிங்க மூர்த்தியின் மையத்தில் அழல் போன்ற பிளவில் (கேவல) தனித்த சந்திரசேகரமூர்த்தி எழுந்தருளியிருக்க லிங்கத்தின் வலப்புறம் பிரமதேவனும், இடப்புறம் திருமாலும் கைகூப்பி நிற்கின்ற நிலையாகும். பிளவினைச் சுற்றி அக்கினிச் சுடர்கள் காட்டப்படுகின்றன. பெருமானின் பாதமும், உச்சியும் காட்டப்படுவதில்லை. இதன் மூலம் முதலும் முடிவற்ற நிலையில் அவர் இருப்பது சுட்டப்படுகின்றது.

லிங்கத்தின் கீழ்ப்பகுதியில் பன்றி வடிவில் திருமாலும், உச்சியில் அன்ன வடிவில் (அல்லது அன்னத்தின் மீது அமர்ந்தவாறு) பிரமதேவனும் பெருமானின் அடிமுடிதேடும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளனர். மேலும் வலப்பகுதியில் பிரமதேவனும் இடப்புறம் திருமாலும் அவரை வழிபடும்பாவனையில் கூப்பியகரங்களுடன் உள்ளனர். இம் மூர்த்தியை புராணங்களும் கல்வெட்டுகளும் "லிங்கபுராணமூர்த்தி" என்றே குறிப்பிடுகின்றன.

சிவாலயத்தில் இவருக்கான இடம் கருவறையின் பின்புறம் அமையும் மாடமாகும். ஆலயத்தின் மற்ற இடங்களில் லிங்ககோற்பவ மூர்த்தியை வைக்கும் வழக்கம் இல்லை.

இச்சிலையமைப்பில் காலப்போக்கில் ஏற்பட்ட சிலபுராண மாறுதல்களால் லிங்கத்தின் இடைப்பகுதியில் தாழம்பூவும் உச்சியில் கொன்றை மலர்க் கட்டும் காட்டப்

படுகின்றன.

"லிங்கபுராணத் தேவரான" லிங்கோற்பவரை கல் திருமேனியாக எழுந்தருளிவைப்பதே வழக்கமாகும். என்றாலும் தஞ்சாவூர் பெரிய கோயிலில் ராஜராஜ சோழனின் மனைவியால் செய்தளிக்கப்பட்ட உலோகத் திருமேனி யிருந்ததை கல்வெட்டு குறிக்கின்றது. இதில் புராணக்கதையை விளக்கும் வகையில் லிங்கம் அதில் தோன்றும். சிவபெருமான், அவரை வழிபட்டு அருள் பெறும் பிரமன், திருமால் ஆகிய மூர்த்திகள் அவர்களின் அவதாரமான பன்றி, அன்னம் ஆகிய வடிவங்களைக் கொண்டிருந்ததால் இம் மூர்த்தம் இலிங்க புராணதேவர் என்றே அழைக்கப்பட்டது.

சிவராத்திரியின் மூன்றாம் காலத்தில் இந்த மூர்த்திக்கு நெய்பூசி, வெந்நீரால் அபிஷேகம் செய்து, கம்பளித் துணிகள் அணிவித்து தாழைமடல்களால் அலங்கரித்து, எள்ளன்னம் நிவேதிக்க வேண்டும் என்பர்.

ஆகமங்களில் சொல்லப்பட்ட வகையில் லிங்கோற்பவரை பல்லவர்கள் கண்ட காஞ்சிக் கலைக்கோயில்கள் அனைத்திலும், வட ஆற்காடு மாவட்டம் குடிமல்லூரிலும் காணலாம்.

லிங்கோற்பவ மூர்த்தம் திருவண்ணாமலைத் தலத்தோடு தொடர்புடையதால் திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேசுவரர், ஏகாம்பரேசுவரர் ஆலயங்களில் இந்த மூர்த்தத்தைச் சற்று கலைநயத்துடனும் காவியநயத்துடனும் அமைத்துள்ளனர்.

இக்காட்சியின் பின்னணியில் அண்ணா மலையும், அதன் மீது தீபமும் காட்டப் பட்டுள்ளன. அதிலிருந்து வெளிப்பட்டு தேவியுடன் கூடியவாறு இடபம் பின் நிற்க பெருமான் காட்சியளிக்கின்றார். இத்தகைய அமைப்பான லிங்கோற்பமூர்த்தியை எங்கும் காணமுடியவில்லை.

பொதுவாக லிங்கோத்பவ மூர்த்தியில் உள்ள சிவபெருமானை நான்கு கரங்களுடன் அவற்றில் மான், மழு, அபய, ஊரு முத்திரைகள் கொண்டவராகவே அமைப்பது வழக்கம். ஆனால் காஞ்சிபுரம் கயிலாசநாதர்

கோயிலில் எட்டு கரங்களுடன் கூடிய லிங்கோத்பவரைக் காண்கிறோம். இவ்வடிவமும் வேறெங்கும் இல்லாததாகும்.

பிள்ளையார்பட்டியில் உள்ள லிங்கோத்பவர் இரண்டு கரங்களுடன் காட்டப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

எது எவ்வாறாயினும் சிவாலயங்களில் கருவறைக்குப் பின் உள்ள கோட்டத்தில் லிங்கோத்பவரை அமைப்பதென்பது சிறப்புடன் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

உலகம் உய்ய உதித்த உடையவர்

சென்ற இதழ் தொடர்ச்சி–

இவ்வாறாகத் திருக்கோட்டியூர் நம்பி அவர்களால் எம்பெருமானார் என்று அன்புடன் அழைக்கப்பட்ட இராமானுஜரிடம் மீண்டும் நம்பிகள் " இந்த பரம ரகசியார்த்தத்தை ஒருவருக்கும் சொல்லாமல் இருப்பாயாக" என கூறவும் இராமானுஜரும் "ஆச்சார்யார் அவர்களே கூரத்தாழ்வார் ஒருவருக்கு மட்டும் உபதேசிக்க அனுமதி வேண்டும் என்றும் அவரைத்தவிர வேறு ஒருவருக்கும் சொல்லமாட்டேன்" என்றும் வேண்டினார். திருக்கோட்டியூர் நம்பியும் "கூரத்தாழ்வாருக்கு அப்பொருளை அறிந்து கொள்ளுவதற்கு அதிகாரம் உண்டு என்றாலும், ஓராண்டுகாலம் உமது மனம் மகிழக்கூடிய கைங்கர்யத்தை குறையறச் செய்த பிறகு அவருக்கு உபதேசிப்பீராக" என அறிவுறுத்தி ஸ்ரீரங்கம் எழுந்தருவீராக என அருளிச்செய்தார்.

இராமானுஜரும், பூமியிலே விழுந்து வணங்கித், திருக்கோட்டியூர் நம்பியின் சிவந்த தாமரை போன்ற பாதங்களைத் தலைமேலே வைத்து, வணங்கி ஸ்ரீரங் கத்திற்கு எழுந்தருளினார். பெருமைமிக்க ராமன் தேவர்களுக்காக தென்திசை இலங்கைவரை சென்று தேவர்களின் காரியம் முடித்து கொண்டு, திரும்புவதற்கு முன்னாலே மனங்கலங்கி, பெருமாளை கண்டதும் மனம் மகிழ்ந்த பரதனை போல, சீடர்குழாம் தனித்தனியே தாங்கி நிற்க, அழகிய பல்லக்கில் எழுந்தருளி அழகிய ஸ்ரீரங்கத்திற்கு வந்து சேர்ந்தார்.

"சீரிய இராமன் தேவர்கள் பொருட்டாத்
தென்திசைக் கேகிமற்றவர்கள்
காரியங் கண்டு திரும்புமுன் கலங்கிக்
கண்டபின் களித்தெழுந்(து) ஆடும்
தாரியல் மார்பன் பரதனை ஒத்தார்
தனித்தனி முதலிகள் தாங்க
ஏரியல் சிவிகை மீதினின் எழுந்தாங்(கு)
எழிலரங் கத்தினில் புகுந்தார்".

இராமானுஜ வைபவம் பாடல் 380.

ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு சென்று, நடந்த அனைத்தையும் அரங்கனிடம் விண்ணப்பித்தார். அரங்கனும் மனம் மகிழ்ந்தார்.

கூரத்தாழ்வார் தன் ஆச்சார்யரான எம்பெருமானாரிடம் தனக்கும் அந்த சரம ஸ்லோகத்தை உபதேசித்து அருளும்படி வேண்டினார். அதற்கு எம்பெருமானாராகிய இராமானுஜர் " திருக்கோட்டியூர் நம்பி அறிவுறுத்தியபடி ஆச்சார்யாருக்கு ஓராண்டு காலம் தொண்டு செய்து, அவர் மனம் மகிழ்ந்த பின்னர் தான் இந்த ஸ்லோகத்தை உபதேசிக்க வேண்டும்" – என அறிவுறுத்தியிருக்கிறார் என்பதால் நீயும் ஓராண்டு காலம் தொண்டு செய்ய வேண்டும் என கூரத்தாழ்வாரை நோக்கி, இராமானுஜர் கூறினார்.

இதனைக் கேட்டதும் கூரத்தாழ்வார் மிகவும் மனம் வருந்தி, யாக்கை நிலைமையை பற்றி குறிப்பிட்டு, மேலும் ஆச்சார்யன் மாளிகையில் ஒரு

பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.

மாதம் உபவாசம் இருந்தால், அது ஆச்சார்யாருக்கு ஒருவரிடம் தொண்டு செய்ததற்கு சமம் என சாஸ்திரங்கள் கூறுவதால், நானும் தங்கள் மாளிகையில் ஒருமாத உபவாசம் இருந்து, உபதேசம் பெற்றுக் கொள்வேன் என வேண்டவும், உடையவரும் அதற்குச் சம்மதித்து, அந்த சரம சுலோகத்தை கூரத்தாழ்வாருக்கு உபதேசம் செய்தார்.

"திருத்துற நோக்கி ஆங்கவை தம்முள்
தேசிகன் திருவுளம் மகிழ
வருந்தியோர் ஆண்டு கைங்கரி யங்கள்
வழுவறச் செய்ததற்(கு) ஒக்கும்
பொருந்துமோர் மாதம் பட்டினி
விட்டப் பொருவிலான் வாயில்
இருந்திடப் பெறினே என்றிருந்
தமைகண்(டு) இணையிலான்
அப்படி இருந்தான்".

இராமானுஜ வைபவம் பாடம் 384.

கூரத்தாழ்வார் உடையவரிடம் சரம ஸ்லோகத்தின் உபதேசம் பெற்றதை அறிந்த முதலியாண்டான் என்னும் மகான் இராமானுஜரை அணுகி, தனக்கும் அந்த சரமசுலோகத்தினை உபதேசிக்கவேண்டும் எனவேண்டவும், எம்பெருமானார் "கூரத்தாழ்வானைத் தவிரவேறு ஒருவருக்கும் அதனை உபதேசிப்பதில்லை" என்று திருக்கோட்டியூர் நம்பிகளிடம் சத்தியம் செய்து கொடுத்திருப்பதால், நீயும் திருக்கோட்டியூர் நம்பிகளை சரணடைந்து அவரிடம் இருந்தே இந்த உபதேசத்தினை பெற்றுக் கொள்வாயாக என பதில் கூறினார்.

" ஆங்கவன் தன்னை நோக்கி ஆசிலா
எதிகள் நாதர்
ஓங்குசீர் நம்பு ஆழ்வான் ஒருவனுக்
குரைத்தி அன்றிப்
பாங்குறும் இதனை யார்க்கும்
பகரலை என்றான் பல்கால்
தாங்குநல் குணத்தின் மிக்காய்
நீயும்அத் தலைவன் தன் பால்"

ஸ்ரீ இராமானுஜ வைபவம் பாடல் 387.

முதலியாண்டான் என்ற மகானும் இளையாழ்வாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, உடையவரை மூன்றுமுறை வலம்வந்து "என்னுயிர் தலைவரே விடையளிப்பீராக" எனச் சொல்லி தெற்குநோக்கி அழகிய திருக்கோட்டியூருக்குச் சென்று ,திருக்கோட்டியூர் நம்பிகளின் திருவடிகளை வணங்கி நின்றார்.

வணங்கி நின்ற முதலியாண்டாரை நோக்கி "இங்கு வந்த காரணம் என்ன" என திருகோட்டி நம்பிகள் வினவவும், முதலியா ண்டான் என்ற மகான் "எம்தந்தையே தேவரீடத்தில் சரமஸ்லோகத்தை உபதேசம் பெற்று, பந்தம் பாசம் ஏற்படுத்தும் பிறவி வேரை அடியோடு அழிக்க வேண்டி வந்தேன்" என மனமுருகிப் பதில் அளித்தார்.

திருக்கோட்டியூர்நம்பி, முதலியாண்டான் என்ற மகானுக்கு சம்மதம் என்றோ, இல்லை என்றோ எதுவும் கூறாமல் ஆறு மாதம் திருமாளிகையில் திருமடைப்பள்ளி பணிபுரிய அனுமதித்தார்.

ஆறு மாதம் திருமாளிகையில் பணிபுரிந்து, ஆச்சார்யர் முன்னேயும் பின்னேயும் சென்று, பகலிலும், இரவிலும் பிரியாமல் கூடவே வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் முதலியாண்டான் திருக்கோட்டி நம்பிகளிடம் "ஒப்பற்றவரே அடியேனுக்கு நல்வாழ்வளிக்கும் வழியை அருள்வீராக" என வேண்டவும், நம்பிகளும் "நீவீர் குலச்செருக்கு கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு ஆகிய முக்குறும்புகளையும் ஒழித்துவிட்டு திரும்பி வருவீராக" என பதிலுரைக்கவும், முதலியாண்டார் திடுக்கிட்டு, உயிருக்கு மூன்று யமனாக விளங்கும், குறும்புகளை நீங்கியபின் வரச்சொல்லி நம்பிகள் சொல்லியதால் மீண்டும் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார்.

"ஆன்றெழுமெய் அறிவுடையாய்
அறுதிங்கள் பின்சென்று
தோன்றிய சீர் நம்பியுடன்
தொண்டனேற்(கு) இரங்கென்றேன்
மூன்றுளவாம் தத்தவற்றுள் முடியாது
தப்பினையேல்
ஊன்றியதோர் மதிமிக்காய் பின்வருதி
என உரைத்தான்".

ஸ்ரீ இராமானுஜ வைபவம் பாடல் 400

–தொடரும்

பலவகையான சிவராத்திரி வழிபாட்டுக் காலங்கள்

சிவராத்திரியானது மாதசிவராத்திரி, யோகசிவராத்திரி, நித்யசிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மகாசிவராத்திரி, என ஐந்து வகைப்படும்.

1. மகாசிவராத்திரி என்பது மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவதாகும். இதனை வருஷ சிவராத்திரி என்றும் மகாசிவராத்திரி என்றும் அழைப்பர்.

2. யோக சிவராத்திரி என்பது திங்கட் கிழமை காலை முதல் 60 நாழிகை அமாவாசை இருப்பது அல்லது திங்கட்கிழமை அஸ்தமனம் முதல் செவ்வாய் காலை வரை தேய்பிறை சதுர்த்தசி இருப்பதுமாகும். இதனை வார சிவராத்திரி எனவும் கூறுவர். திங்கட்கிழமை இரவு நான்காம் சாமத்தில் அரைநாழிகை தேய்பிறை சதுர்த்தசி இருந்தாலும் அதுவே யோகசிவராத்திரியாம். இதனை அனுஷ்டிப் பதால் மூன்றுகோடி சிவராத்திரியை அனுஷ்டித்த பலன் கிடைக்கும்.

3. நித்ய சிவராத்திரி என்பது ஓராண்டு முழுவதும் உள்ள வளர்பிறைத் தேய்பிறை சதுர்த்தசி நாட்களில் வரும் இரவுகளாகும்.

4. பக்ஷசிவராத்திரி என்பது தைமாதத்திய தேய்பிறைப் பௌர்ணமி நாளில் தொடங்கி பதின்மூன்று நாட்கள் ஒரு வேளை உணவுண்டு 14ஆம் நாளாகிய சதுர்த்தசியில் முழுமையாக இரவு கண்விழித்து உபவாசம் இருந்து நோற்பதாகும்.

5. மாதசிவராத்திரி என்பது ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு திதிகளை ஒட்டி அனுஷ்டிக்கப்படும் சிவராத்திரி விரதமாகும். இதன்படி ஒவ்வொரு மாதமும் சிவராத்திரி தினங்கள் மாறி மாறி வரும். இவ்வாறு வரும் ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் ஒவ்வொரு வகையான தேவர்கள் சிவபிரானை அர்ச்சித்து அருள் பெற்றுள்ளார்கள்.

சிவபெருமான் நந்தியம் பெருமானுக்கு சிவராத்திரியின் பெருமைகளை உபதேசிக்க அதை அவர் மற்றவர்களுக்கு உபதேசிக்க அதனைக் கடைபிடித்து பேறு பெற்றுள்ளார்கள்

மோட்ச சாதனம் சிவராத்திரியே

மோட்சத்திற்குச் சாதனமாக இருப்பவை நான்காகும். அவை, 1. சிவார்ச்சனை, 2. உருத்திரபாராயணம், 3. அஷ்டமி, சோமவாரம், தேய்பிறைச் சதுர்த்தசி (சிவராத்திரி) ஆகிய மூன்று நாள் உபவாசம், 4. காசியில் மரணமடைதல் ஆகியவையாகும். இவை நான்கிலும் சிறந்தது சிவராத்திரி விரதமேயாகும். சிவராத்திரி இரவில் சிவபுராணம் கேட்டல், சிவாலய தரிசனம் செய்தல் ஆகியவை மோட்சத்திற்கு எளிய சாதனமாகும்.

அடிமுடிதேடல்

பிரமனும் மாலும் பிரானே நான் என்ன
பிரமன் மால் தங்கள் பேதமையாலே
பரமன் அனலாய் பரந்து முன் நிற்க
அரன்அடி தேடி அரற்றுகின்றாரே.

—திருமந்திரம்.

எண்ணும் எழுத்தும் தரும் இன்னம்பூர் எழுத்தறிநாதர்

கல்வியில் மேம்பாடு அடைவதற்கு வழிபட வேண்டிய தலம் என்றதும், எல்லோருக்கும் கூத்தனூர் சரஸ்வதி ஆலயம் தான் நினைவுக்கு வரும், அதே போன்று சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் தரும் தேவாரத் திருத்தலம் ஒன்று தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் அமைந்துள்ளது. அவ்வாலயத்தைப் பற்றிய சிறப்புச் செய்திகள் இங்கே காண்போம்.

இன்னம்பூர்:

"இனன்" என்பது சூரியனைக் குறிக்கும் சொல்லாகும் "இனன்" இந்த இறைவனை நம்பி வழிபட்ட ஊர் என்பதால் இனன் + நம்பு + ஊர் என்பது இன்னம்பூர் ஆனது. இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காவிரியாற்று வடகரைத் தலங்களுள் 45 ஆவது தேவாரத் தலமாகத் திகழ்கிறது. இத்தலத்தைத் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

சூரியன் தனது, ஆற்றல் மேம்பட இத்தலத்தில் வழிபட்டு பேறுபெற்றதை நினைவூட்டும் வகையில், ஆவணி மாதம் 31, புரட்டாசி, 1, 2 ஆம் தேதிகளிலும், பங்குனி மாதத்தில் 13, 14. 15 ஆகிய தேதிகளிலும் சூரியனின் ஒளிக்கதிர்கள் இறைவனின் திருமேனியில் படுவதைக் காணலாம். சூரியன் தன் கதிர்களால் வழிபடுவதற்கு உதவியாக நந்திதேவர் சந்நிதியை விட்டுச் சற்று விலகி அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அகத்தியர்:

சிவ–பார்வதியர் திருமண விழாவின்போது உலகைச் சமன்செய்யும் நோக்கில் அகத்திய முனிவரை தென்தமிழ்நாடு செல்ல இறைவன் பணித்தார். அவரது ஆணைக்கிணங்க பயணம் செய்த அகத்தியர், சோழ வளநாட்டில் உள்ள இன்னம்பூர் தலம் சென்றார். அங்கே இறைவன் இவருக்குத் தமிழ் இலக்கணம் உபதேசித்து அருள்புரிந்தார். இதன் காரணமாக இறைவனுக்கு எழுத்தறிநாதர் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. இதனை வடமொழியில் அட்சரபுரீசுவரர் என்கின்றனர்.

சுதன்மன்

முன்னொரு சமயம் ஆதிசைவ அந்தணர் குலத்தில் தோன்றிய சுதன்மன் என்பவர் இப்பெருமானை தினமும் வழிபடும் அடியாராகத் திகழ்ந்து ஆலய நிர்வாகத்தையும் திறம்படச்செய்து வந்தார். அச்சமயம் அப்பகுதியை ஆண்டு வந்த மன்னன், அவரவர் கோயில்களின் வரவுசெலவுக் கணக்குகளை எழுதிக்

கொண்டு வருமாறு ஆலய நிர்வாகிகளுக்கு ஆணையிட்டான். சுதன்மனும் இன்னம்பூர் திருக்கோயிலின் கணக்குகளை மன்னன் முன் சமர்ப்பித்தார். ஆனால், கணக்கைச் சரிபார்த்த மன்னனுக்குக் கணக்கில் ஐயம் ஏற்பட்டது. எனவே, அவரை மறுநாள் வரும்படி ஆணையிட்டான். இதனால் அச்சமும் பயமும் கொண்ட சுதன்மன் அன்று முழுவதும் உறக்கமின்றி எழுத்தறிநாதனிடம் இக்குறையைக் களையும்படி வேண்டி நின்றார்.

மறுநாள் பயத்துடன் சென்று மன்னனைச் சந்தித்தார். அப்போது மன்னன் உங்கள் திருக்கோயிலின் கணக்கை இன்று காலையிலேயே ஐயமுற விளக்கிவிட்டீர்களே. இதில் ஐயம் என்ன இருக்கிறது என்று கூறி அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார். சுதன்மனுக்கு ஒன்றும் புரியவில்லை. அன்றிரவு அவருடைய கனவில் தோன்றிய இறைவன், நாமே உன் உருவத்தில் மன்னனிடம் சென்று கணக்கைக் காட்டினோம் என்று கூறினார். சுதன்மன் முன்னிலும் அதிக பக்திகொண்டவனானான்.

ஐராவதம்:

கங்கை நதிக்கரையில் உள்ள காசி விசுவநாதர் ஆலயத்தை தரிசித்த துருவாச முனிவருக்கு இறைவன் திருவடியிலிருந்து செண்பக மலர் ஒன்று கிடைத்தது. அந்த மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடிய முனிவர் இந்திர லோகம் சென்றார். அங்கே தேவேந்திரன் தன் மனைவி இந்திராணியுடன் ஐராவதம் என்னும் வெள்ளை யானை மீதேறி தேவர்கள் புடைசூழ பவனி வந்தார்.

தன்னிடமிருந்த செண்பகமலரை இந்திரனிடம் முனிவர் நீட்டினார். இந்திரனோ தனது கரத்திலிருந்த வஜ்ஜிராயுதத்தில் அம்மலரை வாங்கி ஐராவதத்தின் பிடரியின் மேல் அதை வைத்தார். ஐராவதம் அம்மலரைத் துதிக்கையினால் எடுத்து தன் காலில் போட்டு மிதித்தது. இதைக் கண்டு பதறிய முனிவர், "இந்திரா! நீ சிவபூசையின் பலனை மறந்தாய். சிவபெருமான் சூடிய மலரை அவமதித்தாய். உனது யானையானது காட்டு யானையாக மாறக்கடவது. நீ சுத்த வீரனால் சிதறுண்டு போவாய்" எனச் சாபம் இட்டார். அச்சமுற்ற இந்திரன் பிரம்மனின் ஆலோசனைப்படி இச்சாபம் தீர பழவேற்காட்டிலுள்ள சிந்தாமணீசுவரர் கோயிலுக்குச் சென்று அங்கே செண்பகத் தோட்டம் அமைத்து அப்பூக்களால் வழிபட்டு சாபம் நீங்கப் பெற்றார். சாபத்தின்படி காட்டு யானையாகி அல்லலுற்ற ஐராவதம், செண்பகவனம் எனும் இன்னம்பூர் வந்தது. அங்கே ஓர் தீர்த்தத்தை உருவாக்கி இறைவனை வழிபட்டு தன் சாபம் நீங்கப்பெற்று மீண்டும் சுயவடிவம் பெற்றது.

ஆலய அமைப்பு:

இவ்வாலயம் ஊரின் நடுவில் நாற்புறமும் மதில்களால் சூழப்பெற்றுள்ளது. பிரகாரத்தில் தென்னை மரங்கள் செழித்தோங்கி உள்ளன. இராஜகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டு, ஏழு கலசங்களைத் தாங்கி, கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே நுழைந்ததும், கொடி மரத்து விநாயகரைத் தரிசிக்கலாம். பலிபீடத்தைக் கடந்து இறைவனை நோக்கும் நந்தியை வணங்கி உள்ளே சென்றால், நிருத்த மண்டபத்தின் இடது பக்கத்தில் கம்பத்தில் நடனமாடும் கம்பத்து விநாயகராகிய நர்த்தன கணபதியைக் காணலாம். முகமண்டபத்தின் இடப்புறம் சக்தி விநாயகரையும் வலப்பக்கம், தெற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ள நித்திய கல்யாணி அம்மையையும் கண்டு வணங்கலாம்.

எழுத்தறிநாதர்

திண்டி, முண்டி எனும் துவாரபாலகர்களை வணங்கி, கருவறையின் உள்ளே சென்றால், சாந்த மூர்த்தியாகவும், வேதங்களைத் தம்முள் அடக்கியவராகவும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல்,

அருளல் எனும் ஐந்தொழில்களைச் செய்பவராகவும், தம்மை வணங்குவோர் பெயர்களைத் தம் கையேட்டில் எழுதிக்கொ[illegible]பவராகவும், அருள் வழங்கும் வள்ளலாகவும், மிகப்பெரிய திருவுருவம் கொண்டு லிங்கத் திருமேனியாக கிழக்கு நோக்கியருளும் இன்னம்பூர் ஈசனைக் கண்குளிரக் கண்டு மகிழலாம். இறைவனுக்குத் தான்தோன்றீசர், அட்சரபுரீசுவரர், ஐராவதீசுவரர் என்ற பெயர்களும் வழங்குகிறது. இறைவன் தாமாகவே தோன்றியதால், தான்தோன்றீசன் என்றும் அழைக்கப்படுகிறார்.

இறைவனின் கருவறையைச் சுற்றி அமைந்த கோட்ட மாடங்களில் தெற்கே விநாயகர், பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி, வடக்கே பிரம்மன், காட்சிகொடுத்த நாயனார், துர்க்கை தென்மேற்கில் விநாயகர் சந்நிதியில் அமைந்துள்ளது. மேற்கே அர்த்தநாரீசுவரரும் அதனெதிரில் சுப்பிரமணியர் சந்நிதியும் அமைந்துள்ளன. வடமேற்கில் தட்சிண கயிலாயலிங்கம், விசுவநாதர், விசாலாட்சி, மகாலட்சுமி, விஷ்ணு துர்க்கை, ஜேஷ்டாதேவி ஆகிய திருவுருவங்களும், கோமுகிக்கு அருகில் தனிச்சந்நிதியில் சண்டேசுவரரும் அமைந்துள்ளனர். சுவாமியின் கருவறை விமானம் கஜப்பிருஷ்ட வடிவில் ஐந்து கலசங்களைக் கொண்டு அமைந்துள்ளது. விமானத்தில் கிழக்குப் பகுதியில் அமைந்த கீர்த்திமுகம் எனும்பெரிய பிரபா மண்டலத்தில் இறைவன், இறைவி, சுதன்மன் மற்றும் மன்னன் ஆகியோரின் திருவுருவங்கள் சுதைச் சிற்பங்களாக அமைந்துள்ளன.

பெரியவர் எனும் நடராஜர்

தெற்கு நோக்கிய சுற்றுச்சுவரில் சிலை வடிவில் நடராஜப் பெருமான் எழுந்தருளி யுள்ளார். இவ்வூர் மக்கள் இவரை மூல நடராஜராக வணங்கி வருகின்றனர். திருவாதிரைத் திருநாளில் இவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தபிறகே செப்புத் திருமேனிக்கு பூசை நடைபெறுகிறது. இந்த நடராஜப் பெருமானை இவ்வூர் மக்கள் 'பெரியவர்' என்றே அழைக்கின்றனர்.

இவ்வாலயத்திலுள்ள செப்புத் திருமேனிகள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். ஒருசமயம் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும் போது வலையில் கிடைத்த நடராஜரின் திருமேனியை மன்னனிடம் ஒப்படைத்தனர். அதை எங்கே நிலைப்படுத் தலாம் என்று மன்னன் யோசித்தான். அவனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை இறைவனின் விருப்பப்படியே எழுந்தருளச் செய்ய முடிவுசெய்தான். நடராஜர் திருவுருவம் இல்லாத ஆலயங்களின் பெயர்களை ஓலையில் எழுதி, குடத்திலிட்டு ஒரு குழந்தையை எடுக்கச் செய்தான். அதில் இன்னம்பூர் பெயர் எழுதப்பட்ட ஓலை கிடைத்தது. அதன்படியே இவ்வூருக்கு அச்சிலை அளித்தான் என்பது செவிவழிச் செய்தியாகும். இத்திருமேனி கலைநயத்துடன் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். நடராஜர் மண்டபத்தின் இடது புறம் ஒரு சுரங்கப் பாதையும் காணப்படுகிறது.

நித்திய கல்யாணி சந்நிதி

சுவாமி கருவறைக்குச் செல்லும் வழியில் முகமண்டபத்தில் தெற்கு நோக்கிய நித்திய கல்யாணி அம்மன் தனிச்சந்நிதி அமைந்துள் ளது. நான்கு கரங்களுடன் திகழும் இந்த அன்னை சகல கல்யாண குணங்களுடன் அடியார்களுக்கு எந்நாளும் அருள் வழங்கி வருகிறாள். இவளுக்கு சௌந்தரநாயகி என்ற பெயரும் உண்டு. இவரை வழிபடுவோருக்குத் திருமணம் விரைவில் கைகூடும் என்னும் நம்பிக்கை உள்ளது.

சுகந்த குந்தளாம்பாள் சந்நிதி

இராஜகோபுரத்தின் வலப்புறம் தெற்கு நோக்கியவாறு தனிக் கோயிலாக சுகந்த குந்தளாம்பாள் சந்நிதி விளங்குகிறது. மணம் பொருந்தி நெருங்கி வளைந்த அழகிய கூந்தலுடையவள் என்பது அன்னையின் பெயருக்கான விளக்கம். இச்சந்நிதி கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றுடன் இரண்டடுக்கு விமானம் கொண்டு ஒரு செப்புக் கலசத்துடன் விளங்குகிறது. மகா மண்டபத்தில் நவக்கிரகங்கள் எழுந்தருளியுள்ளனர். அன்னைக்குப் பூங்கொம்பு நாயகி, கொந்தார் குழலம்மை என்ற பெயர்களும் வழங்குகிறது.

கல்வெட்டுகள்

கி.பி. 1927ஆம் ஆண்டு தொல்லியல் வெளியிட்ட ஆய்வறிக்கையில் அட்சரபுரீசுவரர் ஆலயத்தின் மைய மண்டபத்தில் சோழமன்னன் இராஜகேசரிவர்மனின் நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு 24 வரிகளைக் கொண்ட தமிழ்க் கல்வெட்டாகும். இதில், 'காவிரி வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர்' என இவ்வூர் குறிப்பிடப் பட்டுள்ளது. அரிஞ்சிகை விண்ண கரம் எனும் வைணவக் கோயிலை தென்னவன் விழுப்பரையனுடைய மனைவி அரிஞ்சிகை என்பவள் கட்டியதையும் இக்கோயிலில் ஐந்து அந்தணர்களுக்குப் பூஜைக்குப் பின் உணவு வழங்க நிபந்தம் ஏற்படுத்தியதையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தலம் – தீர்த்தம்

இக்கோயிலுக்கு தல மரம் செண்பக மாகும், வில்வ மரமும் இந்நாளில் தலமரமாகக் கூறப்படுகிறது. இந்நாளில் திருக்கோயிலின் எதிரே அமைந்த திருக்குளம் ஐராவத தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

விழாக்கள்

இவ்வாலயத்தில் சித்திரை 21ஆம் தேதி கோடை அபிஷேகம் மற்றும் நடராஜர் அபிஷேகம், வைகாசியில் திருஞானசம்பந்தர் நட்சத்திரம், ஆனியில் திருமஞ்சனம், திருக்கல்யாணம், ஆடிப்பூரம், ஆவணியில், விநாயகர் சதுர்த்தி, ஆவணி மூலம், நடராஜர் அபிஷேகம், புரட்டாசியில் நடராஜர் அபிஷேகம், கந்தர் சஷ்டி, தீபாவளி, கார்த்திகை முதல் ஞாயிறு தீர்த்தவாரி, சோமவாரம், கார்த்திகை தீபம், மார்கழியில் திருவாதிரை, தைப்பொங்கல், மாசியில் மகா சிவராத்திரி, பங்குனியில் உத்திரம், ஆவணி, புரட்டாசி, பங்குனி மாதங்களில் சூரிய பூஜை என விழாக்கள் சிறப்புடன் நடைபெறு கின்றன.

அமைவிடம்

கும்பகோணம்–சுவாமிமலை வழித்தடத்தில் புளியஞ்சேரிக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் இன்னம்பூர் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து வசதி உள்ளது.

தலத்தின் தனிச்சிறப்பு

அகத்தியருக்கு இலக் கணத்தைக் கற்றுத் தந்ததாலும், சுதன்மனுக்காக மன்னனிடம் எண்ணையும் எழுத்தையும் காட்டியதாலும், இறைவன் எழுத்தறிநாதராகப் போற்றப்படுகிறார். இதனால் தினந்தோறும் குழந்தைகளை இங்கு அழைத்துவந்து நெல்லினால் நாக்கில் அர்ச்சகர் எழுதுவது வழக்கமாக உள்ளது. இதனால் குழந்தைகள் சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் பெற்றுச் சிறந்த அறிவாளிகளாக திகழ்வார்கள் என்பது அசையாத நம்பிக்கையாக உள்ளதை இங்கு வரும் பக்தர்களின் கூட்டம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

ஆலய தரிசன நேரம்

காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் கோயில் நடை திருந் திருக்கும். சொல்லாற்றலிலும் எழுத் தாற்றலிலும் புலமை பெற விரும்புவோர் வந்து செல்ல வேண்டிய முதன்மையான தலமாக இன்னம்பூர் திகழ்கிறது.

படங்கள் – கட்டுரை – பனையபுரம் அதியமான்

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } த. பிச்சாண்டி. இ.ஆ.ப., முதன்மை செயலர்/ ஆணையர் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை – 21 தொலைபேசி : 25967929

3.2.2009 அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து

சென்னை ராயப்பேட்டை அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயில், நுங்கம்பாக்கம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில், மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/06-08

அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

மேல்மலையனூர், செஞ்சி வட்டம்,விழுப்புரம் மாவட்டம்

பிரம்மோற்சவ அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2040 மாசி மாதம் 11ம் தேதி (23.02.2009) திங்கட்கிழமை முதல் மாசி மாதம் 23ம் தேதி (07.03.2009) சனிக்கிழமை முடிய மாசிப்பெருவிழா சிறப்பாக நடைபெறும். மாசிப்பெருவிழாவில் பக்த கோடி அன்பர்கள் சேவை பிரார்த்தனை செலுத்தி அம்மனின் திருவருள் பெற்றுய்ய கேட்டுக்கொள்கிறோம்.

தேதி கிழமை	நேரம் காலை	மாலை	காலை உற்சவ விபரம்	மாலை உற்சவ விபரம்
23.02.2009 திங்கள்	6.00 மணிக்குமேல் 7.30 மணிக்குள்	9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	"மகா சிவராத்திரி" "கோபாலவிநாயகர் பூஜை"	ஜாம பூஜை துவஜா ரோகணம், சக்தி கரகம்
24.02.2009 செவ்வாய்	10.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"மயானக் கொள்ளை"	"ஆண்பூத வாகனம்"
25.02.2009 புதன்	9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"தங்க பல்லக்கு"	"பெண் பூத வாகனம்"
26.02.2009 வியாழன்	9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"தங்க பல்லக்கு"	"சிம்மவாகனம்"
27.02.2009 வெள்ளி		4.00 மணிக்கு மேல் 6.00 மணிக்குள்	மேல்மலையனூர் வார வழிபாட்டு மன்றங்கள் சார்பாக "தீமிதி விழா"	இரவு 9மணிக்குமேல் "அன்ன வாகனம்"
28.02.2009 சனி	10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"தங்க பல்லக்கு"	"யானை வாகனம் "
01.03,2009 ஞாயிறு	---------	4.30 மணிக்கு மேல் 6.00 மணிக்குள்	பஞ்சமி திதி சிம்ம லக்கினத்தில் "திருத்தேர் வடம் பிடித்தல்"	------------
02.03.2009 திங்கள்	9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"பல்லக்கு"	"குதிரை வாகனம்"
03.03.2009 செவ்வாய்	10.30 மணிக்கு மேல்	9.00 மணிக்கு மேல்	"சத்தாபரணம்"	"அம்மன் சத்தாபரணம், புஷ்ப பல்லக்கு"
04.03.2009 புதன்	9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	9.00 மணிக்கு மேல்	"தீர்த்தவாரி மண்டகப்படி"	"அம்மன் தெப்பல் உற்சவம்"
05.03.2009 வியாழன்	9.00 மணிக்கு மேல்	9.00 மணிக்கு மேல்	"சிறப்பு அபிஷேகம்"	"நாக வாகனம்"
06.03.2009 வெள்ளி	9.00 மணிக்கு மேல்	----------	"சிறப்பு அபிஷேகம்"	"சிறப்பு அலங்காரம்"
07.03.2009 சனி	9.00 மணிக்கு மேல்	----------	"சிறப்பு அலங்காரம்"	"காப்பு களைதல்"

வி. காசி பூசாரி,
அறங்காவலர் குழுத்தலைவர்
வி.ஜி. மாணிக்கம் பூசாரி, அறங்காவலர்
வி.எம். சரவணன் பூசாரி, அறங்காவலர்
பி. ஏழுமலை பூசாரி, அறங்காவலர்

சி. குமரதுரை, பி.எஸ்சி., பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்,
வி. பெருமாள் பூசாரி, அறங்காவலர்
நான்காம் முறை பூசாரிகள்
ஆர்.எம். வடிவேல் பூசாரி, அறங்காவலர்